
27.06.2013

# உதய சூரியன்

Source for reading hunters

களம் - 01, சூரியன் - 43 பக்கம்: 32 விலை: 20/=



## சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் பெண்களின்

# ஆடைவிவகாரம்



## வாழ வழியை ஏற்படுத்தித் தருவார்களா?

அங்காடி வியாபாரிகள் அங்கலாய்ப்பு



# வாழ வழியை ஏற்படுத்தித் தருவார்களா?

**இங்க வியாபாரம் நடக்கிறதில்ல. பொருட்களை அடிக்கி நாங்க தான் வடிவு பார்க்கிறம். எங்களுக்கு வருமானமில்ல. கடன்பட்டு சிறு தொழிலை தொடங்கி இன்று கடன்காரரா நிக்கிறம்.**

வவுனியா நகர அங்காடி வியாபாரிகளின் கண்ணீர்ப் புலம்பல் இது!

இவர்கள் யாவரும் வவுனியா நகரில் நடைபாதை வியாபாரிகளாக இருந்தவர்கள்.

இவர்களின் வியாபாரத்தால் வவுனியா வர்த்தக சங்கத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், போக்குவரத்து செய்பவர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் முன்வைக்கப்பட்ட புகார்களையடுத்து இவர்களுக்கு நகரசபைக்கு முன்பாக அங்காடி கடைத்தொகுதி அமைது கொடுக்கப்பட்டது.

கடந்த வருடம் வவுனியா நகரசபையினால் 25 இலட்சம் ரூபா செலவில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் இந்த இடத்தில் வியாபாரம் செய்ய முடியாது என்றும் தாம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்து தமக்கு மாற்றிடம் வழங்கக் கோரி நகரசபைக்கு முன்பாக கடந்த வாரம் உண்ணாவிரதப் போராட்டத்தினை இந்த அங்காடி வியாபாரிகள் நடத்தினர்.

## அங்காடி வியாபாரிகள் அங்கலாய்ப்பு

இது தொடர்பில் அங்காடி கடைத்தொகுதியில் வியாபாரம் செய்து வரும் ஆர்.தெய்வேந்திரம் கூறுகையில்;

நாங்க நடைபாதை வியாபாரம் செய்த போது நல்ல விற்பனை நடந்திச்சு. நாங்க அத்துமீறி வியாபாரம் செய்வதாகக் கூறி எங்கட பொருட்கள அடிக்காடி யூசிக்காரங்க வந்து பறிச்சாங்க. பறிச்ச பொருட் களை எல்லாம் இன்னும் தரயில்ல. இப்படியே நெடுக பிரச்சினை நடந்ததால தாங்களாகவே முடிவெடுத்து இங்க மூன்று




கொட்டில் போட்டு தந்தாங்க என்றார்.

இப்பகுதியில் ஆரம்பத்தில் அங்காடி வியாபாரிகளாக 97 பேர் இருந்தனர். தற்போது 33 பேர் மாத்திரமே உள்ளனர். இவ்வாறு ஒரு வருடத்திற்குள் அதிக அங்காடி வியாபாரிகள் ஏன் மாயமானார்கள் என வினவிய போது, எஸ்.தினேஸ் இவ்வாறு கூறினார்.

எங்களுக்கு தந்த இந்த இடம் ஒதுக்குப்புறமான இடம். இங்க வியாபாரம் நடக்கிறதில்ல. பொருட்களை அடிக்கி நாங்க தான் வடிவு பார்க்கிறம். இதால குடும்பத்துக்கேயும் சண்ட. அதான் கனபேர் இதை விட்டுட்டு கூலி வேலை செய்யுறாங்க. என்னட்ட இருந்த முதலும் போச்சு நானும் இப்ப மேசன் வேலைக்கு போக தொடங் கிட்டேன். ஏதோ என்ன நம்பி மனிசியும் மூன்று பிள்ளைகளும் இருக்கு அதுக்காக உழைக்கத் தானே வேணும் என்றார்.



விடிய 8 மணிக்கு கடையை நடத்த தொடங்கி 7 மணிக்கு பூட்டுறம். சில நாட்களில் கைவிசேஷ வியாபாரம் கூட நடக்கிறேல. ஆனா நகரசபை நாள் வாடகை 60 ரூபாவையும் விடாம வாங்கிடு வாங்க. சிலவேளை வீட்டிலிருந்து தான் வாடகைப் பணம் கொண்டு வந்து குடுக்கிறம். அப்ப நாம எப்படி வாழுறது என எம்.மின்கிட் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

நான் ஒன்றுக்கு 200 ரூபாவுக்கு கூட விற்பனை நடைபெறுவதில்லை. இங்கு உழைக்க வந்து பணத்தை செலவு செய்யுறது தான் மிச்சமாக உள்ளது. கடன் பட்டு சிறு தொழிலை தொடங்கி இப்ப பெரும் கடன்காரர் ஆகிட்டோம். எனவே தமக்கு மாற்றிடம் வழங்க வேண்டும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை பதில் தலைவர் எம்.எம்.ரதன், ஆளுநரின் ஆணையாளர் முனைகதீன், வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்தியசீலன் மற்றும் நகரசபை உறுப்பினர்களான சிவகுமார், குமாரசாமி, செல்லத்துரை, முநெனவர், சிறிரெலோவின் செயலாளர் நாயகம் உதயராசா ஆகியோர் வருகைதந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் தொடர்ந்து நடைபெறவிருக்கும் நகரசபைக் கூட் டத்தில் இது குறித்து கலந்துரையாடி முடிவு தருவதாக உறுதி மொழியும் வழங்கினர்.

அவ்வாறு உறுதிமொழி வழங்கப்பட்டபோதும் இன்று வரை அவர்களுக்கு வவுனியா நகரசபையால் எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை என இவ்வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கே.சஜீதரன் என்னும் அங்காடி வியாபாரி கூறுகையில்; வவுனியா நகரசபையின் எல்லைக்குட்பட்ட குருமன்காடு சந்தியிலும் காமினி வித்தியாலயத்திற்கு முன்னாலையும் பிரதேசசெயலகத்திற்கு முன்னாலையும் றோட்டில கனபேர் வியாபாரம் செயுறாங்க. அவங்கள விட் டுட்டு எம்மை தான் வாழவிடுறாங்க இல்ல. கூட்டம் முடிய பதில் தாறம் என்று அன்டைக்கு சொல்லி வீரக்கதை கதைச்சாங்க. ஆனால் இன்றுவர ஒன்றும் சொல்லேல்ல. எங்கட குடும்பம் செத்தாலும் இவங்க பதில் தராங்கள் இல்ல என கூறினார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் சமூகத்தில் தாமும் தமது குடும்பமும் மற்றவர்களிடம் கையேந்தாது சொந்த உழைப்பில் வாழவேண்டும் என இந்த அங்காடி வியாபாரிகள் நினைப்பதில் தவறில்லை.

எனவே, இனியாவது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தங்களது கதிரைகளை அலங்கரிப்பதை விட்டு விட்டு குடும்பங்களை கொண்டு நடத்த வழிகேட்கும் இவர்களுக்கு வாழ வழியை ஏற்படுத்திக் கொடுப்பார்களா? என்பதை இனி வரும் நாட்களே வெளிப்படுத்தும்.

-கே.வாசு-

# தெரிவுக்குழுவில் மலையக மக்கள் சார்பில்

## முத்து சிவலிங்கம் சாதிப்பாரா?

தற்போது இலங்கையின் அரசியலமைப்பு விடயமாக இருப்பது 13 ஆவது அரசியல் சீர்திருத்தம். இதனை ஒட்டியே அண்மைக்காலமாக இலங்கை அரசியல் சுழன்றுக் கொண்டிருக்கிறது. இதில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, சிறுபான்மைக் கட்சிகள் என அனைத்தும் ஆதரவையும் எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை இத் திருத்தம் பாராளுமன்றத்தில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் பின்னர் அது தெரிவுக்குழுவின் ஊடாக விபரிக்கப்பட்டு பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்காக பிற்போடப்பட்டது. அந்த தெரிவுக்குழுவில் ஆளும் கட்சி சார்பான அங்கத்தவர்களை, ஆளும் கட்சி தெரிவுசெய்து சபாநாயகர் ஊடாக பாராளுமன்றில் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது.


யுத்தம் நிறைவடைந்த பின்னர் 13(+) பற்றி பேசிய அரசு தற்போது 13 ஆம் திருத்தத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதாவது 13 ஆவது திருத்தத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் 19 ஆவது திருத்தத்திலும் மாற்றங்களை கொண்டுவர ஆளும் கட்சி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

13 ஆவது திருத்தத்தை வலுவிழக்கச் செய்ய 19 ஆவது திருத்தத்தில் இரண்டு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒன்று இரண்டு மாகாண சபைகளை இணைத்து ஒன்றாக இயங்கும் முறை மாற்றப்பட்டு மாகாண சபைகள் இணைப்பை தடுப்பதற்கும், இரண்டாவது மாகாண சபைகள் சார்பாக ஏதாவது சட்டமூலங்கள் சமர்ப்பிக்கும் வேலையில் மாகாண சபைகள் அனைத்திலும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற சரத்து மாற்றப்பட்டு பெரும்பான்மையான மாகாண சபைகளின் ஆதரவு இருந்தால் போதும் என்ற மாற்றம் செய்வதற்கும் 19 ஆவது திருத்தத்தில் மாற்றத்தினையும் அதேபோல் 13 ஆவது திருத்தத்தில் இருந்த மாகாணசபைகளுக்கான காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பனவற்றை இல்லாதொழிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கோடு இந்திய அரசின் தலையீட்டோடு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவும் இணைந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண சபை முறைமையை உருவாக்கியிருந்தனர்.

அந்த மாகாண சபை முறைமையே போதாது என்று தட்டிக் கழித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் வடகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் தற்போது ஓரளவாவது அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் 13 ஆவது திருத்தத்தையே வலுவிழக்கச் செய்யும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்போது எவ்வாறான நடவடி க்கைகளை எடுக்கப்போகின்றன என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

வடக்கு, கிழக்கு மக்களுக்காக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான முதலாவது தேர்தல் 1988 நவம்பர் 19 ஆம் திகதி நடத்தப்பட்டது. யுத்தம் உக்கிரமாக நடைபெற்ற அந்தக் காலகட்டத்தில் வரதராஜப் பெருமாள் முதலமைச்சரானார். பின் அவரது அதிகாரம் குறைந்தது எனக் கூறி இந்தியாவில் தஞ்சமடைந்ததைத் தொடர்ந்து பின்னர் ஆளுநர் ஆட்சியே காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2009 இல் யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இணைந்த வடகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது வடமாகாண சபைக்கான தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படுகின்ற நிலையில் அம் மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பே வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு உள்ளதாக அரசியல் அவதானிகள் கூறும் நிலையில் மாகாண சபைக்கான அதிகாரங்களை குறைப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



இவ் விடயம் சம்பந்தமாக அண்மையில் ஊடக நிறுவனங்களின் செய்தி ஆசிரியர்களை ஜனாதிபதி சந்தித்தபோது அவர்களின் கேள்விகளுக்கு 13 ஆவது திருத்தம் சம்பந்தமாக பின்வரும் பதில்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது இந்திய-இலங்கை ஒப்பந்தம் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக மீறப்பட்டுள்ளதே என கேட்டபோது; ஆராய்ந்து பார்த்தால் தெரியும் உடன்படிக்கையின் இரண்டாவது பிரிவில் 10 ஆவது சரத்தை யார் மீறியுள்ளனர் என்று. மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமா என்று கேட்டபோது; மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டுவிட்டால் வடமேல் மாகாணத்தின் நிலை எவ்வாறு இருக்கும்? நான் தென்னிலங்கைக்கே செல்லமுடியாது போகும். நான் கிராமத்திற்கு செல்ல வேண்டுமென்றால் கூட மாகாண சபைகளின் அங்கீகாரத்தை பெறவேண்டிவரும் எனத் தெரிவித்தார். அதேபோல் 13 ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியாவின் கருத்து என்ன என்று கேட்டபோது; சில நாடுகள் அவர்களின் அரசியல், பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்பவே செயற்படும். அண்மையில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. இச் சந்திப்புகளின் போது இவ் விடயம் கலந்துரையாடப்பட்டிருக்கும். இருந்தபோதும் தமது உள்நாட்டு அரசியல் செயற்பாட்டுக்கு ஏற்பவே அரசு தீர்மானம் எடுக்கும் எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் ஆளும் கட்சியில் 13, 19 திருத்தம் தொடர்பில் ஆளும் கட்சியின் சிறுபான்மை மக்கள் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா, ரிசாட் பதியுதீன், அதாவுல்லா ஆகியோருடன் மலையக மக்கள் சார்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர், பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். அத்தோடு ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கின்ற மற்றுமொரு பிரதான சிறுபான்மை கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவுக் குழுவில் உள்ளீர்க்கப்படாமை பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக்கொள்ளல் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்திருக்கின்றனர்.

தற்போது ஆளும் கட்சியில் உள்ள வாசுதேவ நாணயக்கார மற்றும் ராஜித சேனாரட்ன உட்பட 16 அமைச்சர்கள் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். தாம் அதிகார பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கையோடே அரசில் இணைந்து கொண்டுள்ளதாக கூறியிருக்கின்றனர்.

எது எப்படியோ மலையக மக்கள் சார்பாக தெரிவுக் குழுவில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கருத்தை மட்டும் முன்னிலைப்படுத்தாமல் ஒட்டுமொத்த மலையக மக்களின் கருத்தை முன்வைக்க வேண்டும். அதற்கு அனைத்து தரப்பினதும் கருத்துக்களை பெற்றுக்கொள்ள வேண்டும். அதிகார பரவலாக்களை எதிர்பார்க்கின்ற சமூகம் என்ற வகையில் மலையக சமூகம் சார்பான ஆக்கபூர்வமான யோசனைகளை தெரிவுக்குழுவில் முன்வைக்க வேண்டும். மலையக சமூகத்தை தனியான சமூகமாக அடையாளம் காட்ட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

ஆகவே மலையக மக்கள் சார்பில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்ற இ.தொ.கா. இவ்விடயத்தில் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும் என்பதே மலையக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

எஸ்.சந்திரமோகன்

வேலை வாய்ப்பு

சம்பளம் 18,000/=, 25,000/=, 40,000/= எங்கள் தனியார் துறை முகத்தில் கப்பல் வேலைக்கு 18–45 வயதுவரையான ஆண்கள் தேவை. உணவு தங்குமிட வசதி உண்டு. தொடர்புகளுக்கு. மெயின்ஸ்ரீட், அநுராதபுரம்.

☎: 077-3033803

தேவை

சம்பளம் 20,000/=, 28,000/=, 30,000/= வரை. எங்கள் பிஸ்கட், சொக்லட், சவர்க்காரம், பால்மா, டயர், க்ளவுஸ், சீமெந், சீட் ஆகிய தொழிற்சாலைகளில் உற்பத்தி, பொதியிடல், லேபல் ஒட்டுதல், மேற்பார்வை, களஞ்சியப்படுத்தல் பிரிவிற்கு 18–55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதியுண்டு. நண்பர்கள் தம்பதியினர் குழுவாக இணைத்துக் கொள்ளப்படுவர்.

☎: 077-2523241, 077-7920278

# விளைவை மாற்ற செயலை மாற்றுங்கள்!

எதை விதைக்கிறோமோ அதைத் தான் அறுவடை செய்ய முடியும் என்பது விதி. துவரையை விதைத்து, அவரை விளைச்சலை எதிர்பார்க்க முடியாது. தாவரவியலில் மட்டுமல்ல இந்த உண்மை மனிதனின் வாழ்வியலிலும் கூட மாற்ற முடியாத அடிப்படை விதியாக இருக்கிறது. எதையெல்லாம் செய்கிறோமோ அதற்கான விளைவுகளை நாம் சந்தித்தே ஆக வேண்டும்.

நம் முன்னோர்கள் இதை கர்மா என்று சொல்வார்கள். நம் செயல்களின் விளைவு இந்தப் பிறவியில் அனுபவிக்கப்படாவிட்டால் அடுத்த பிறவி வரை கூடத் தொடரும் என்றார்கள். உங்கள் நிழல் கூட இருட்டில் மறைந்து விடும். ஆனால் நீங்கள் செய்த செயல்களின் விளைவான கர்மா தன் பலனை அனுபவிக்கச் செய்யும் வரை என்றும் கூடவே வரும். அதனால் தான் பெரியோர்கள் இறந்த பின்னும் கூடவே வருவது அவரவர் நல்லது, கெட்டது தான் என்பார்கள்.

> பிரச்சினைகள் என்பவை சிறு கற்கள் போன்றவை.
> கண்ணின் அருகில் வைத்தால் நம்முடைய பார்வையை மறைத்துவிடும்.
> தள்ளி வைத்துப் பார்த்தால் அவை எவ்வளவு சிறியவை என்பது புரியும்.

விதைகளின் தன்மை விளைச்சலில் தெரிவது போல செயல்களின் தன்மை அதன் விளைவுகளில் தெரியும். நடும் போது யாரும் பார்க்கவில்லையே என்று ஒருவன் கோணல் மாணலாக நாற்றுகளை நடலாம். ஆனால் அவை வளர்ந்த பின் என்ன நட்டிருக்கிறீர்கள் என்பதையும் எப்படி நட்டிருக்கிறீர்கள் என்பதையும் உலகிற்குக் காட்டாமல் விடாது. அதனால் தவிர்க்கமுடியாத இந்த விதிக்கு விதிவிலக்காக இருக்க வேண்டும் என்று ஆசைப் படாதீர்கள். அப்படி நடக்க வாய்ப்பேயில்லை. ஏனென்றால் இந்த அடிப்படை விதியிலேயே உலகம் அன்றிலிருந்து இன்று வரை இயங்குகிறது. இந்த விதியே இயற்கை. இந்த விதியே இறைவன்.

எனவே நன்மைகளை தன் வாழ்க்கையில் சந்திக்க விரும்பும் மனிதன் தன் செயல்களில் நன்மை இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தீமைகளைச் செய்துவிட்டு தனக்கு நன்மை நடக்கும் என்று நம்புபவன் முட்டாளுக்கு இணையாகிறான்.

எல்லா அக்கிரமங்களையும் செய்துவிட்டு கங்கையில் மூழ்கினாலும் பாவத்தைக் கழுவி விட முடியாது. உங்கள் செயல்களைக் கண்டு கொள்ளாமல் இருக்க இறைவன் மாமூல் வாங்கும் அரசு அதிகாரி அல்ல. ஆகையால் கோயில் உண்டியல்களில் கோடி கோடியாய் கொட்டினாலும் உங்கள் கணக்கு சரியாகிவிடாது. உங்கள் கணக்கு சரியாவது அதற்குத் தகுந்த விளைவோடு தான்.

சில சமயங்களில் நல்ல செயல்களுக்கு நல்ல விளைவுகளும், தீய செயல்களுக்கு தீய விளைவுகளும் கிடைப்பதற்குத் தாமதமாகலாம். அந்த தாமத காலத்தில் இந்த விதி பொய்ப்பது போன்ற தோற்றம் பலருக்கும் தோன்றலாம். ஆனால் தாமதமானாலும் விளைவுகள் வட்டியோடு வந்து சேரும் என்பதில் சந்தேகம் தேவையில்லை.

> இளமையாக இருக்கும்போது ரோஜா மலர்கள் மீது படுத்தால் முதுமையான காலத்தில் முட்கள் மீது படுக்க நேரிடும்.
> இளமையில் தனது தோலை கடினமாக்கிக் கொண்டவனுக்கு முதுமையில் முட்கள் குத்தினாலும் வலிக்காது.

இடைவெளி எவ்வளவாக இருந்தாலும் செயலும் விளைவும் பிரிக்க முடியாத ஜோடி என்பதால் ஒன்றின் பின்னாலேயே மற்றது தானாக வந்து சேர்ந்தேயாகவேண்டும்.

எனவே விளைவுகளை மாற்ற விரும்பினால் மனிதன் செயல்களை மாற்ற வேண்டும். அதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை. இந்த விதி நன்மை, தீமைகளுக்கு மட்டும் பொருந்துவது அல்ல. செயலின் சிறப்புத் தன்மைக்கும் இதே விதி தான்.

விளைவைப் பார்க்கையிலேயே அந்த செயல் எப்படி செய்யப்பட்டு இருக்கிறது என்பது சந்தேகத் திற்கு இடமில்லாமல் தெரிந்து விடும். கவனமாகச் செய்தீர்களா, ஈடுபாட்டுடன் செய்தீர்களா,




முழு மனதோடு செய்தீர்களா, அந்த செயலுக்குத் தேவையான அறிவுபூர்வமாகச் செய்தீர்களா என்பதை எல்லாம் நீங்கள் சொல்ல வேண்டியதில்லை. உங்கள் செயலின் விளைவு சொல்லிவிடும்.

இந்த அடிப்படை உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் பலர் காலம் முழுவதும் கஷ்டப்படுகிறார்கள். நான் என்ன தான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் முன்னேற்றமில்லை என்று பலர் புலம்புவதை நாம் கேட்கிறோம். குறிப்பிட்ட வகையில் எத்தனை உழைத்தாலும் முன்னேற்றமில்லை என்றால் அந்த உழைப்பில், உழைக்கும் விதத்தில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்றல்லவா அர்த்தம்.

அப்படி இருக்கையில் அப்படியே தொடர்ந்து உழைத்துக் கொண்டு போவது முட்டாள்தனம் அல்லவா? எங்கே என்ன தவறு இருக்கிறது அல்லது என்ன குறைபாடு இருக்கிறது என்று கண்டுபிடித்து அதன்படி சரிசெய்து கொண்டு உழைத்தாலல்லவா நாம் நல்ல விளைவுகளைக் காணமுடியும். இந்த அடிப்படை உண்மையை வாழ்க்கையில் உணர பலரும் மறப்பதுதான் பரிதாபம்.

செய்கின்ற வேலையில் முன் யோசனையும், திட்டமிடுதலும், தேவையான திறமையும் இருந்தால் அந்த வேலை சீக்கிரமாக முடியும், சிறப்பாகவும் முடியும். ஆனால் உழைப்பு மட்டும் இருந்து முன் சொன்ன மூன்றும் இல்லாவிட்டால் வேலையும் முடியாது, வேலை சிறப்பாகவும் இருக்காது. வேலை எதுவாக இருந்தாலும் விதி இது தான்.

> பிச்சை கேட்பது குற்றமல்ல. அது அறிவுப் பிச்சையாக இருக்கட்டும்.
> தேடுவது குற்றமல்ல. அது புதிய கண்டுபிடிப்பாக இருக்கட்டும்.
> மடிவது குற்றமல்ல. அது போர்க்களமாக இருக்கட்டும்.
>
> ★ உண்மையை மிதித்தால் அது உடனே வாளாக மாறிவிடும்.

செயலின் முடிவே விளைவு என்ற உண்மையே மிகப்பெரிய பாடம் என்று சொல்லலாம். இப்போது இருக்கும் நிலைமையில் உங்களுக்குத் திருப்தி இல்லையா? நீங்கள் அடைய நினைத்த வெற்றிகளை அடையவில்லையா? உலகம் உங்களை சரியாக மதிப்பிடவில்லை என்ற வருத்தமா? இதில் எதற்காவது ஆம் என்பது பதிலாக இருந்தால் முதலில் உங்களுடைய செயல்பாடுகளை ஆராய்ந்து பாருங்கள்.

செயல்படும் முறையிலும், செயல்படும் நேரத்திலும் குறைபாடுகள் இருக்கலாம். அல்லது செய்ய வேண்டிய ஏதோ முக்கியமானது விடுபட்டுப் போயிருக்கலாம். செய்யக்கூடாத ஏதோ ஒன்றை நீங்கள் செய்து கொண்டும் இருக்கலாம். சரியான கூட்டல், கழித்தலை உங்கள் செயல்களில் புகுத்தினால் கண்டிப்பாக விளைவுகள் மாற ஆரம்பிப்பதைப் பார்க்கலாம். அதை விட்டு விட்டு வருந்துவதும், குமுறுவதும், புலம்புவதும் மாற்றத் திற்கு உதவாது.

இப்படித்தான் இருப்பேன், இப்படித்தான் வேலை செய்வேன், இப்படி எல்லாம் நடக்க வேண்டும் என்று சொல்பவன் தோற்பதற்கு தன்னைத் தயார் செய்து கொள்கிறான். செயலின் விளைவு எதிர்பாராததாக இருந்தால் ஏன் என்று சிந்தித்து மாற்ற வேண்டியதை மாற்றிவிட்டு மறுபடி செயல்பட வேண்டும்.

> இவன் ஒரு முட்டாளோ என்று நாலு பேர் சந்தேகப்பட்டாலும் பரவாயில்லை.
> வாயைத் திறவாமல் இருப்பதே மேல், வாயைத் திறந்து அந்த சந்தேகத்தை உறுதிப் படுத்துவதைக் காட்டிலும்.
>
> ★தோல்வி என்பது முனைப்பில்லாத முயற்சிக்குக் கிடைக்கும் பரிசு.

அவ்வப்போது நம்மை சரி செய்து கொண்டே இருப்பது தான் உண்மையான முன்னேற்றத்திற்கு உதவும். அதுவே நம் வாழ்க்கையை மெருகுபடுத்திக் கொண்டே செல்லும். எல்லா மகத்தான மனிதர்களும், எல்லா வெற்றியாளர்களும், தாங்கள் வேண்டும் விளைவுகளுக்கேற்ப தங்கள் செயல்களை சரிப்படுத்திக் கொண்டே வந்தவர்கள் தான். உலகம் அவர்களை அதிர்ஷ்டக்காரர்கள் என்று சுருக்கமாக அழைத்தாலும் சரியான நேரத்தை, சரியானதை, சரியான விதத்தில் செய்ததுதான் அந்த அதிர்ஷ்டத்தின் இரகசியம்.

இதுவே வாழ்க்கையில் படிக்க வேண்டிய மிகப்பெரிய பாடம். இதில் தேர்ச்சி பெற்றால் ஒருவன் சாதிக்க முடியாத இலக்குகள் இல்லை, அடைய முடியாத சிகரங்களும் இல்லை.

# ரயில் முன் பாய்ந்து யுவதி தற்கொலை


கண்டி பேராதனை ரயில் பாதையில் இரவு வேளையில் ரயில் முன்பாய்ந்து யுவதி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கண்டி சுதுஹூம் பொல என்ற இடத்தில் கடந்த ஞாயிறு இரவு இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி பேராதனைக்கான ரயில் பாதையில் சுதுஹூம் பொல என்ற இடத்தில் ரயில் சென்றுகொண்டிருந்த போது சுமார் 18 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது தற்கொலைக்கான காரணத்தைக் கண்டறிய கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கண்டி காளியம்மன் ஆலயத்திற்கு முன்பாக ஞாயிறு இரவு சுமார் 58 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின்



சடலம் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் இச்சடலத்தை மீட்டுள்ளனர். இதேவேளை சடலத்தை அடையாளம் காணவும் இம்மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# உதயசூரியன் பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் - | வீ. இராதாகிருஷ்ணன் |
| தற்போதைய பதவி - | ம.ம.முன்னணியின் அரசியல் துறை பொறுப்பாளர் |
| எதிர்பார்க்கும் பதவி- | (ஹி...ஹி... பிரதியமைச்சு பதவிதான் (இன்னுமா எதிர்பார்க்குறீங்க?) |
| நண்பர்கள் - | இ.தொ.கா வால் தூக்கியெறியப்பட்டவர்கள் (மீண்டும் தான் அங்கு சென்று ஒட்டிக் கொள்கின்றார்களே? |
| எதிரிகள் - | எனக்கு அமைச்சு பதவி கிடைக்கக் கூடாது என கங்கணம் கட்டி செயற்படும் அந்த கூட்டத்தினர். |
| கட்சி தாவியது தொடர்பாக - | யானைக்கு வாலாக இருப்பதை விட பூனைக்கு முகமாக இருக்கலாம் தானே? (ரொம்ப நொந்து போயிருப்பீங்க போல?) |
| பொழுது போக்கு - | மஹிந்த அரசின் மனம் நோகாத வகையில் அறிக்கை விடுவது |
| ஒரே கவலை - | நான் பிரதியமைச்சு பதவிக்காகத்தான் அரசுடன் ஒட்டிக் கொண்டிருப்பதாக சிலர் விமர்சிப்பது. |
| ஒரே [illegible] - | மலையக காணிகளை துண்டாடி பெரும்பான்மையினத்தவருக்கு கொடுப்பதை அதிகாரத்தில் இருக்கும் சிலர்(?) அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பது (அவர்களால் வேறு என்ன செய்யமுடியும்) |
| மத்தியமாகாண கல்வியமைச்சு தொடர்பாக - | ஹி....ஹி.. அப்படியொன்று தற்போது இருக்கா? (ஐய்யய்யோ!) |
| ஒரே இலட்சியம் | எப்படியாவது அமைச்சராகி அவர்களுக்கு பாடம் புகட்டுவது (அப்படியா எப்போது?) |

(யாவும் கற்பனை) - எம். தாசன்

# புதிய நிர்வாகக் குழு தெரிவு!

நானுஓயா, கிரிமிட்டிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட டெஸ்போர்ட், சீனிகத்தாலை, எபஸ்போர்ட, கிரிமிட்டிய, கார்லபேர்க், தம்பகஸ்த்தலாவ, எவோக்கா போன்ற பிரதேசங்களை உள்ளடங்கிய கிரிமிட்டிய கிராம அபிவிருத்தி சங்கத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகக் குழு தெரிவுக்கான பொது கூட்டம் இன்று 27 ஆம் திகதி எபஸ்போர்ட் தமிழ் வித்தியாலயத்தில் பிற்பகல் 2.30இற்கு நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் எம்.பாஸ்கர் தெரிவித்தார்.

இப்பொதுக்கூட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த 2 வருட காலமாக எமது சங்கத்தின் தலைமையில் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை செய்துள்ளோம். அந்த வகையில் பிரதேசத்தின் 3 பாடசாலைக்கு வர்ணம் பூசுவதற்கு நிதி ஒதிக்கீடு செய்து கொடுத்ததோடு, டெஸ்போர்ட் வாசிகசாலை புனரமைப்பு, வீதி புனரமைப்பு போன்ற வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளோம்.

மேலும் இச்சங்கத்தினூடாக இப் பிரதேசத்தில் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளையும், சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை நிருபர்




## தையல் பயிற்சி வகுப்புகள்
(நவநாகரிக முறையில்)

சகல விதமான ஆடைகளும் 06 மாதத்தில் Tailoring முறைப்படி திறம்பட தைத்துக் காட்டப்படும்.

06 Months Course

ஜூலை மாதம் முழுவதும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்

பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் :-

- பண்டாரவளை - அனு Tailor (பண்சல Road) - ஜூலை 01,08,15 திங்கள் காலை 10.00
- பதுளை - பிரதீபா நிலையம் - ஜூலை 04,11,18 வியாழன் காலை 10.00
- ஹட்டன் - சக்தி கல்வி நிலையம் - ஜூலை 07,14,21 ஞாயிறு 11.00
- வெலிமடை - ஒக்ஸ்போர்ட் - ஜூலை 03,10,17 புதன் காலை 10.00

தையல் என்பதைப் தையலாக மட்டுமல்லாமல் கலையாகக் கற்றுத்தரும் தென்னிந்திய கலைப்பாணியில் பயிற்சி பெற்ற பிரபல ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி குமார் அவர்களின் வழிகாட்டலில்......

இப் பயிற்சியை தபால் மூலமாகவும் தொடர முடியும்

தொடர்புகளுக்கு:
077 -9643159/ 0724304555 / 071 - 1697918



## தேவை

பல்வேறு தொழில் வாய்ப்புக்கள்.
ஜேம், கோடியல், பிஸ்கட், சொக்கலட் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, பொதியிடல், களஞ்சிய பிரிவுகளுக்கு 18–50 வரையான ஆண்/பெண் தேவை.
Driving, பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் உண்டு.
18000/= - 30000/= க்கும் மேல் வருமானம்...! குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- 077-8508118






மௌனத்தில்
உள்ள வார்த்தைகளை
யும் உன் கோபத்தில்
உள்ள அன்பையும்
யாரால் உணரமுடிகி
றதோ அவர்கள்தான்
உனக்காக படைக்கப்
பட்ட உண்மையான
உறவுகள்.


10 ஆம் பக்க புதிருக்கான விடைகள்....
மூன்று பூக்கள், நான்கு பறவைகள்


# புதிர் BOX

## கண்ணாமூச்சி




## சூப்பர் ரூப்பர்





**படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...**

### புளூமூன்

ஒரு மாதத்தில் 2 பௌர்ணமிகள் வந்தால் 2 ஆவது பௌர்ணமியை புளூமூன் என்பர். ஒரு வருடத்தில் 2 முறை புளூமூன் வந்தால் அதை டபுள் புளூமூன் என்பர். புளூமூன் 3 வருடங்களுக்கு ஒரு முறையும், டபுள் புளூமூன் 19 வருடங்களுக்கு ஒரு முறையும் ஏற்படும்.

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02 ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## வார்த்தைப் புதிர் - 64



### இடமிருந்து வலம்

01. விடுமுறை முடிந்து திறப்பது
06. - பொருள், ஏவல் தெரியாமல் பேசக்கூடாது என்பார்கள்
10. சேதி.
12. மலர் வேறுசொல்.
13. ஒட்ட உதவுவது.
17. இல்லாதவர்களுக்கு கொடுப்பது. (குழம்பியுள்ளது)
21. மரத்துண்டு.
22. முத்து இருக்கும் இடம்.
26. பிரமாண்டமாக உருவெடுப்பது.
28. நகை செய்பவர்.

### வலமிருந்து இடம்

05. சூரியன் இருக்கும் நேரம்.
08. ஒரு மாதமாக மாணவர்கள் மறந்து இருப்பது.
09. 'இது போனால் சொல் போச்சி' என்பார்கள்.
15. குளத்தில் வழுக்குவது.
19. சோறு அதிகமாக குழைந்துவிட்டால்.
20. தொல்லை வேறு சொல்.
25. காயம் வேறு சொல்.
30. தந்திரத்திற்கு பெயர் போன விலங்கு.

### மேலிருந்து கீழ்

01. இதன் சொல்லுக்கு பலன் பார்ப்பார்கள்.
02. முடி, கேசம்.
03. கடிதம். 07. வசீகரம்.
10. - உடையான் படைக்கு அஞ்சான் என்பார்கள்.
14. காட்டு ராஜாவை அடைமொழியாக கொண்டு தொடங்கும் ஊர் பெயர்.
18. ஆண்களுக்கு இது அழகு.
20. இலவசம் பேச்சு வழக்கில்.
23. தந்தை.
25. புலி பசித்தாலும் இதை தின்னாது.
27. சுவரில் கிறுக்க பயன்படுவது.

### கீழிருந்து மேல்

04. போதைதரும்.
11. செம்மறி ஆட்டில் இருந்து கிடைப்பது.
16. கண்ணாடியில் தெரிவது.
22. மருத்துவ குணம் உள்ள நிலக்கீழ் தண்டு. முதல் எழுத்து இல்லை.
28. இந்துக்களின் பண்டிகை.
29. பெண்களின் சிகை முடி.
30. சொர்க்கமல்ல.



# சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம்

அண்மைக்காலத்தில் எமது நாட்டில் சர்ச்சையைக் கிளப்பிய விடயங்களில் ஒன்று முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம்.

பொதுபலசேனா போன்ற இனவாத அமைப்புக்கள் முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரத்தில் சில வாதத்திற்குரிய கருத்துகளைச் சொல்லிக் கொண்டு இருக்கின்றன.

இந்த ஆடை விவகாரத்தின் ஒரு கட்டமாக மன்னம்பிட்டி, பாணந்துறை போன்ற இடங்களின் அபாயா அணிந்த முஸ்லிம் பெண்கள் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்தேறியிருக்கிறது.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தையே பின்பற்றுகிறார்கள். மெல்லிய, இறுக்கமான ஆடைகள், உடலின் அங்கங்கள் தெரியக் கூடிய ஆடைகள் அணிவதும் ஹராமாகும். தனது வீட்டுக்குள் பெண்கள் சுதந்திரமாக இருக்கலாம். ஆனால் வெளியே செல்லும் போது மார்க்கம் அனுமதித்ததன் பிரகாரமே ஆடைஅணிகலன்களை அணிய வேண்டும்.

அபாயா விடயத்தில் பொதுபல சேனா அமைப்பால் அண்மையில் பல சர்ச்சைகள் கிளம்பின. எனவே இந்த அபாயா விடயத்தில் பொதுபல சேனாவின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அவ்வமைப்பின் இணைப்பாளர் பேராசிரியர் டிலந்த விதானகேயைத் தொடர்பு கொண்டு கேட்டோம்

முஸ்லிம் பெண்களின் ஆடைகள் தொடர்பில் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இதை நாம் ஒரு மத ரீதியான பிரச்சினையாகப் பார்க்கவில்லை. பொது இடங்களில் முகத்தை மூடி நடமாடுவதைத் தான் எதிர்க்கின்றோம்.



> இதை நாம் ஒரு மத ரீதியான பிரச்சினையாகப் பார்க்கவில்லை. பொது இடங்களில் முகத்தை மூடி நடமாடுவதைத் தான் எதிர்க்கின்றோம்.
>
> பொதுபல சேனாவின் இணைப்பாளர்



> அபாயாக்கள் மூலம் முஸ்லிம் பெண்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது என்ற கருத்து தவறானது. முஸ்லிம் பெண்கள் அபாயாவை விரும்பியே அணிகிறார்கள். அதுவே பெண்களுக்கு பாதுகாப்பானதும் கூட..!
>
> -இஸ்லாமிய நாகரிக விரிவுரையாளர்



> முஸ்லீம் பெண்கள் அணியும் ஆடைகள் ஒழுக்கம் மிக்கதாகும். முஸ்லீம் மாணவிகள் அணியும் ஆடைகள் சிறப்பானவை. இதனை நாமும் பின்பற்ற வேண்டும்.
>
> வஜிர ஸ்ரீ நாயக்க தேரர்

ஒருவர் முழு உடம்பையும் மறைத்துக் கொண்டு வந்தால் அவர் யார் எப்படிப்பட்டவர் என்று எதையும் எம்மால் இனங்கண்டு கொள்ள முடியாது. உதாரணமாக பாதையில் செல்கின்ற வாகனங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் கண்ணாடிகளில் கறுப்பு ஸ்டிகர்கள் ஒட்டப்பட்டிருந்தால் (டின்டட்) பொலிஸார் அவற்றை அகற்றி விடுகின்றனர். ஏனென்றால் அவர்களால் உள்ளே யார் இருக்கின்றார்கள் என்று அறிந்து கொள்ள முடியாது. அது குற்றச் செயல்களுக்கு வழிவகுக்கும்.

அதே போன்று தான் முகத்தை மூடி ஆடை அணிவதால் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. இது பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும். எனவே தான் நாம் இந்த ஆடைகளை எதிர்க்கின்றோம். அவர்கள் வீட்டிலும் தனிப்பட்ட இடங்களிலும் எவ்வாறு வேண்டுமானாலும் இருந்து கொள்ளட்டும். ஆனால் பொது இடங்களில் முழுமையாக மறைத்து இருப்பதையே நாம் எதிர்க்கின்றோம் என்று தெரிவித்தார்.

அபாயா விடயத்தில் பொதுபலசேனா அமைப்பினர் ஏற்படுத்திய பிரச்சினைகளுக்கு அவர்கள் தரப்பிலிருந்து கூறும் நியாயம் இதுதான்.

இது தொடர்பாக இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய நாகரிக விரிவுரையாளர் எம்.ஆர். அஸாத்திடம் கேட்டபோது;

நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பாலியல் பலாத்காரம் வல்லுறவு போன்றவை பாரியளவில் இடம்பெறுகின்றன. இதற்கு முக்கிய காரணம் பெண்கள் கவர்ச்சியான ஆடைகள் அணிவதுதான். உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் பலவிதமான ஆடைகளை அணிந்து பொது இடங்களில் செல்கிறார்கள். அபாயாவைப் பொறுத்தவரையில் அந்த நிலைமை இல்லை.

அபாயாக்கள் மூலம் முஸ்லிம் பெண்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது என்ற ஒரு கருத்து பரவி வருகிறது. உண்மையில் இது தவறான கருத்து. முஸ்லிம் பெண்கள் அபாயாவை விரும்பியே அணிகிறார்கள்.

இதேவேளை இன்று ஒரு சில பெண்கள் அபாயாவை ஒரு ஆடம்பரப் பொருளாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது இஸ்லாம் அனுமதித்த வரையறைக்கு அப்பால் போய் இறுக்கமானவையாகவும், கவர்ச்சியாகவும் அணிகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளினாலேயே அபாயாவின் தனித்துவம் சிதைக்கப்பட்டு ஏனையவர்கள் அதை விமர்சிக்கும் நிலைக்கு போயுள்ளது என்று தெரிவித்தார்.

அதே போன்று இந்த அபாயா தொடர்பாக தனது கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கின்றார் குருநாகல் ஹுசைனியா அரபுக் கல்லூரி அதிபர் எம்.எம்.எம்.இலியாஸ் மௌலவி;

முஸ்லிம்கள் இஸ்லாம் மதம் அண்மைக்காலமாக கடுமையாக விமர்சிக்கப் பட்டு வருவதை அறிவார்கள். அதிலும் பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள பலவிதமான உரிமைகளைப் பற்றியும் பலர் விமர்சிக்கிறார்கள். குறிப்பாக பெண்களின் ஆடைகள் தொடர்பில் இன்று பலவிதமான சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 25 ஆம் பக்கம்)

பஹமுன அஸாம்

# அக்னிப் பரீட்சையின் ஆரம்பமாக இருக்குமோ?

## சிவ்சங்கர் மேனனின் கொழும்பு வருகை

இலங்கையும் இந்தியாவும் இராஜதந்திரப் போரில் ஈடுபடும்வேளை நெருங்கிவிட்டதா? கொழும்பிலும் புதுடில்லியிலும் ராஜதந்திரவட்டாரங்களில் இவ்வினா எழும்பியுள்ளது. ஜெயவர்த்தனா-ராஜீவ்காந்தி இருவரும் கையெழுத்திட்ட இலங்கை இந்தியா உடன்படிக்கையின்படி இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.


அந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்வதற்கு அல்லது மேலும் திருத்துவதற்கு கொழும்பு அரசாங்கம் தீவிர முனைப்புக் காட்டுகின்றது. அதற்கு மேலாக 13 ஆவது திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமையை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டும் என்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணியும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய பேரினவாத அமைப்புக்கள் மும்முரமாகச் செயல்பட்டுவருகின்றன. இப்பின்னணியில் புதுடில்லி அரசாங்கம் சிறப்புத் தூதுவர் ஒருவரை இலங்கை விவகாரத்தைக் கையாளுவதற்கு நியமிக்க எண்ணியது.

முதலில் ஹர்பித்சிங்பூரி என்பவரின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. பூரி இலங்கை இனப்பிரச்சினை விவகாரங்களை முழு அளவில் அறிந்த ஒருவர். 1987 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திட்ட காலத்திலும் அதற்கு முன்பதாகவும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அரசியல் செயலாளராக பணியாற்றியவர். அவரின் மனைவி லட்சுமி பூரியும் ஒரு இராஜதந்திரியாவார். இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்பு யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை நேரிற் சந்தித்து அவர் புதுடில்லி செல்வதற்கான பயண ஒழுங்குகளை மேற்கொண்டவர் ஹர்பித்சிங்பூரி ஆவார்.

பிரபாகரனை உயிருடன் சந்தித்து உரையாடிய இந்திய ராஜதந்திரிகளில் இன்று உயிருடனிருப்பவர் ஹர்பித்சிங்பூரி மட்டுமே. இப்போது இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் பதவி வகித்து ஓய்வுபெற்றுள்ளார். பூரியையே 13 ஆவது திருத்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சிறப்புத் தூதுவராக அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் முதலில் எண்ணியிருந்ததாக ஒரு தகவல்.

இனப்பிரச்சினை, அதற்கான தீர்வு காணப்பட்ட விதம் குறித்து ஆ தொடக்கம் ஃ வரை விபரம் தெரிந்த பூரியை இந்தியா தனது சிறப்புத் தூதுவராக அனுப்புவதை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என்றொரு தகவல் ராஜதந்திர வட்டாரங்களில் வெளியாகியுள்ளது. இப்போது பூரிக்கு பதிலாக இலங்கையில் இந்திய தூதவராக பணியாற்றிய சிவ்சங்கர் மேனனை சிறப்புத் தூதராக புதுடில்லி அனுப்புகின்றது. சிவ்சங்கர் மேனன் தற்போது இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகராகவும் தெற்காசிய நாடுகள் பிரிவின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார். அடுத்தவாரம் சிவ்சங்கர்மேனன் கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். சிவ்சங்கர் மேனனின் கொழும்பு விஜயம் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த ஒன்றாகும். திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்டதல்ல.

அவரது வருகை 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பானதல்ல என்று இலங்கை வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளது. சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் பற்றி இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான அக்னிப்பரீட்சை என்ற தலைப்பில் சிலோன் ருடே என்ற கொழும்பு ஆங்கில தினசரி தனது 25.06.2013 ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. சிவ்சங்கர் மேனனின் கொழும்பு விஜயம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல; சாதாரணமானதொன்றே என்ற இலங்கையின் நிலைப்பாட்டை அந்த ஆசிரியர் தலையங்கம் சாடியுள்ளது. தனது தேசியப் பாதுகாப்பு ஆலோசகரை சாதாரண முக்கியத்துவமற்ற விஜயத்தை மேற்கொள்ள இந்தியா அனுமதிக்காது.



அடுத்தமாதம் இலங்கை செல்லும் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர், ஏதோ ஒரு இலக்குடன்தான் வருகின்றார். காலி முகத்திடலில் காற்றை சுவாசிக்கவோ அல்லது கொழும்பு அரசியல்வாதிகளுடன் கைகுலுக்கி மகிழவோ சிவ்சங்கர் மேனன் கொழும்பு வரப் போவதில்லை என்றும் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் சிவ்சங்கர் மேனனின் வருகையின் நோக்கம் என்னவாக இருக்கும்?

13 ஆவது அரசமைப்புத் திட்டத்தில் கைவைக்கக் கூடாது. இருக்குமாற்போல் அதனை நடைமுறைப்படுத்தவேண்டும். இதுதான் இந்தியாவின் அசையாத நிலைப்பாடாகும் என்று இலங்கைக்கு சிவ்சங்கர் மேனன் திட்டவட்டமாகத் தெரிவிப்பார் என்று அவ்வாசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா ஓர் அமைதியான ராஜதந்திரப் போக்கையே யுத்தத்தின்போதும் பின்னரும் கடைபிடித்து வந்தது. மேற்குலக நாடுகளின் நிர்ப்பந்தங்களிலிருந்து இலங்கையை பாதுகாக்கும் போக்கையே இந்தியா கொண்டிருந்தது. அப்போது இந்தியாவை மிஞ்சி அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை ஈடுபடாது என்று கொழும்பு அரசாங்கம் உறுதிகூறி வந்தது. 13 ஐ நிறைவேற்றுவோம், 13 இற்கு அப்பாலும் சென்று அரசியல் தீர்வு காணுவோம் என்றெல்லாம் கொழும்பு அரசாங்கம் இந்தியாவிற்கு வாக்குறுதியளித்து வந்தது. யுத்தம் முடிந்து நான்காண்டுகள் கழித்தும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்திய-இலங்கை ராஜதந்திர உறவில் அசைக்கமுடியாத ஒன்றாக இலங்கை-இந்திய உடன்படிக்கையும் அதன்கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தமும் உள்ளது என்பது புதுடில்லி வட்டாரங்களின் தற்போதைய நிலைப்பாடாகும்.

கொழும்பு அரசாங்கத்தின் பிந்திய நிலைப்பாடுகள் இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தபோதும்; இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கு தூண்டியிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன. இந்தியாவின் சிறப்பு தூதர் சிவ்சங்கர் மேனனின் கொழும்பு வருகை இரு நாடுகளுக்கும் இடையேயான அக்னிப் பரீட்சையின் ஆரம்பமாக இருக்குமோ?

**அநாமிகன்**

உலகம் பேசுகிறது





# புலியை பூனையாகப் பார்க்க வேண்டுமா?

தாய்லாந்தின், கஞ்சன்பாரி பகுதியில், ''வாட்பா வாங்காதபா'' என்ற புத்தர் கோவில் உள்ளது. இதை புலிக் கோவில் என்றும் சொல்கின்றனர்.

கடந்த 1994 இல் அமைக்கப்பட்ட இக்கோவிலில், பிரார்த்தனை நிமித்தம் ஒரு புலிக் குட்டி விடப்பட்டது. ஆனால், அது இறந்து போனது. அதன்பின், பலர் அன்பளிப்பாக புலிக்குட்டியை வழங்க ஆரம்பித்தனர். இன்று இந்த கோவிலில் நூறு புலிகள் உள்ளன. கோவில் நிர்வாகமே லாவோஸ் நாட்டிலிருந்து சில புலிக்குட்டிகளை வாங்கியுள்ளது. புத்த துறவிகளும் தன்னார்வத் தொண்டர்களும் இப்புலிகளை பராமரித்து வருகின்றனர். ஒரு பக்கம் பக்தி பிரார்த்தனை. மறுபுறம் புலிகள் நடமாட்டம். ஆனால், இந்த புலிகள் இங்கு பூனையாக நடமாடுகின்றன. துறவிகள் உதவியுடன் அதைத் தொடலாம். புட்டி பால் புகட்டலாம். அது தூங்கும் போது, மடியில் தூக்கிவைத்துக் கொஞ்சலாம். இதற்கு துறவிகளும் தொண்டர்களும் உதவுவர்.

இதை கோவில் சரணாலயம் என்றும் கூறலாம். இதற்குள் நுழைய ஒரு கண்டிஷன் உண்டு. கண்ணைப் பறிப்பது போன்ற வண்ணங்களில் ஆடைகளை அணிந்து வரக் கூடாது. மீறி வந்தால் அனுமதி இல்லை. வாசலில் விற்கும் மென்மையான வண்ணம் கொண்ட, உடைகளை வாங்கி, அணிய வேண்டும்.

இங்கு பெரும்பாலும், சீன புலிகளே உள்ளன. பெங்கால் புலி ஒன்றும், சிங்கப்பூர் புலி ஒன்றும் உள்ளன. புலி தவிர, மான், ஒட்டகம், எருமை மற்றும் குரங்குகளும் உள்ளன.

''இங்கு புலிகள் துன்புறுத்தப்படுகின்றன. அதனால், தடை செய்ய வேண்டும்...'' என பல சர்வதேச வனவிலங்கு சேவை நிறுவனங்கள் வலியுறுத்தின. ஆனால், அது எதுவும் எடுபடவில்லை. தாய்லாந்திலிருந்து 38 கி.மீ., பயணம் செய்தால், இந்த கோவிலை அடையலாம். புலியை, பூனையாகப் பார்க்க வேண்டுமா? இந்த கோவிலுக்கு வாங்க!

# கணவருக்கு கோவில் கட்டி வழிபடும் பெண்



ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர்களின் பண்பாடு. கணவனே கண்கண்ட தெய்வம், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என பண்டைய தமிழகப் பெண்கள் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், இன்றோ சமூகத்தில் நிலைமை மாறி விட்டது. குடும்ப உறவுகளின் ஆழமான பாசம் குறைந்துவிட்டது. ஆனால், இந்த அவசர காலத்திலும் இந்தியாவின் கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே பணப்பாக்கம் என்ற கிராமத்தில் வசித்து வரும் லலிதா என்ற பெண் தனது கணவருக்காக கோயில் கட்டி கும்பிட்டு வருகிறார்.

அவர் கூறுகையில்: எனது கணவர் பரமசிவம் 2000 ஆம் ஆண்டில் காலமாகிவிட்டார். எங்கள் மீது அவர் மிகுந்த பாசம் வைத்திருந்தார். அவரது மறைவால் குடும்பமே சோகத்தில் ஆழ்ந்தது. நான் மட்டும் எனது கணவர் என்னுடன் தான் இருக்கிறார் என்ற எண்ணத்தோடு வாழத் தொடங்கினேன். அவரது ஆசியோடு எனது பிள்ளைகளை படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தேன்.

எனது கணவரின் நினைவாக வீட்டிலேயே அவரது சிலையை உருவாக்கி கோயில் கட்டினேன். தினந்தோறும் அவருக்கு பூஜை செய்து வருகிறேன். எந்த நிகழ்வானாலும் அதை செய்வதற்கு முன்பு எனது கணவரின் கோயிலில் பூஜித்து விட்டுத்தான் செய்வேன் என்றார்.

# பள்ளிக்குச் சென்று பாடம் எழுதும் செல்லக் குரங்கு

மனிதர்கள் செய்யும் பல விடயங்களை குரங்குகள் செய்யக் கூடியவைதான். ஆனால் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் ஓர் அதிசயக் குரங்கு பள்ளிக்கு செல்கிறது, வீட்டுப்பாடம் எழுது கிறது

கர்நாடக மாநிலத்தில் உள்ள பிளுகலி கிராமத்திற்கு கடந்த 2 மாதங்களுக்கு முன் உணவு தேடி குழந்தையுடன் தாய்க் குரங்கு ஒன்று வந்தது. சில நாட்கள் கிராமத்தில் தங்கி இருந்த தாய்க் குரங்கு தனது பெண் குட்டிக் குரங்கை கிராமத்தில் அனாதையாக விட்டுச் சென்று விட்டது. தாயின் அரவணைப்பு இல்லாமல் தவித்த குட்டிக் குரங்கை கிராமத்தில் வசிக்கும் மகாதேவப்பா, ரூபா தம்பதியர் எடுத்து வளர்க்க ஆரம்பித்தனர். அதற்கு தினமும் பால், பழம், உணவு கொடுத்து பராமரித்தனர். பின் குடும்பத்தில் ஒரு உறுப்பினராகிவிட்ட குரங்கிற்கு ராணி என்று பெயர் சூட்டி மகிழ்ந்ததுடன், தங்கள் பிள்ளையைப் போல் பேணிக் காத்து வருகிறார்கள். ரூபா சொல்லிக் கொடுக்கும் அனைத்தையும் தவறாமல் குட்டிக் குரங்கு ராணி செய்து வருகிறது.



தினமும் காலை 6 மணிக்கு தூக்கத்தில் இருந்து எழும் குரங்கு மகாதேவப்பாவுடன் வயல்வெளி செல்கிறது. காலைக் கடனை முடித்த பின் ரூபாவின் பிள்ளைகள் குளிக்கும்போது, அவர்களுடன் சேர்ந்து குளிக்கிறது, காலை உணவு எடுத்து கொள்கிறது. ரூபா மற்றும் அவரது பிள்ளைகளுடன் பள்ளிக்குச் செல்கிறது. மாலை வரை பள்ளியில் இருந்தபின் ரூபாவுடன் வீடு திரும்புகிறது. ரூபாவின் பிள்ளைகளுடன் வீட்டுப்பாடம் செய்கிறது.

வாரம் முழுவதும் பள்ளிக்கு செல்லும் குரங்கு ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் வயல்வெளிக்கு செல்வது, மார்க்கெட், ஷொப்பிங் செல்வது உட்பட பல பணிகளில் ஈடுபடுகிறது. மாலை நேரத்தில் கிராமத்தில் உள்ள சிறுவர் சிறுமிகளுடன் விளையாடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளது. குட்டிக் குரங்கு ராணி ரூபா குடும்பத்தில் மட்டுமல்ல பிளுகலி கிராமத்தினரின் செல்லக் குழந்தையாக மாறியுள்ளது.

# என்னாச்சி...!

தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த என் தோழி, ஒரு
சினிமாப் படமும் விடாமல் பார்ப்பாள். ஆனால், காதல் பற்றிப்
பேச்செடுத்தால் அந்த இடத்தைவிட்டே ஓடிவிடுவாள். அப்படிப்
பட்டவள் கம்பெனியில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த ஒருவரின்
காதல் வலையில் விழுந்து விட்டாள். அதற்கு அவள் கூறிய கார
ணம் வியப்பாக இருந்தது. அவளுக்கு பிடித்த சினிமா நடிகரின்
சாயலில் அவர் இருந்ததால் அவரது காதலை மறுக்க மனம் வர
வில்லை என்று கூறினாள். மேலும், அவர் நல்லவர் எனக்காக எதை
யும் செய்வார் என்றெல்லாம் புகழ் பாடினாள்.
தன் காதலுக்கு, பெற்றோர் எதிர்ப்புத் தெரிவிக்கவே, காதல் கண்
களை மறைக்க வீட்டைவிட்டு வெளியேறி, சில நாட்கள் காதலனு
டன் தனியாக வாழ்ந்தாள். ஆனால், தனது பெற்றோரின் சம்மதம்
வாங்கி வருவதாக கூறிச் சென்ற அவன் திரும்பி வரவில்லை.
பொலீஸுக்கு செல்ல தைரியமில்லாத அவள், வேறு வழியின்றி
தன் பெற்றோரிடம் திரும்பிச் சென்றிருக்கின்றாள். அவர்களோ,
தங்கள் பேச்சை மதிக்காமல் சென்ற
அவளை, மகள் என்று ஏற்றுக்
கொள்ளவே மறுத்துவிட்டனர்.
தற்போது அவள் அவளின்
நண்பியின் வீட்டில் தங்கி
கண்ணீரும் கம்பலையுமாக
நாட்களை கடத்திக் கொண்டி
ருக்கிறாள்.
இளமை வேகத்தில், பெற்
றோரை புறக்கணித்து, வீட்டை
விட்டு வெளியேறுவது விவே
கமும் அல்ல, பாதுகாப்பும் அல்ல என்
பதை, காதல் வயப்படும் இளம் பெண்
கள் புரிந்துகொள்ள வேண்டும்.



நான் என்னுடைய நண்பன் வீட்டுக்குச் சென்றி
ருந்தேன். அப்போது அவனை வீட்டில் உள்ள
அனைவரும் திட்டிக் கொண்டிருந்தனர். விசா
ரித்தபோதுதான் அந்த விபரீதம் தெரிந்தது.
நண்பனின் தந்தை முன்தினம் இரவு
மருத்துவமனையில் அனுமதிக்
கப்பட்டிருக்கிறார். இதற்கு ஒரு மணி
நேரம் முன்பு அவன் தன் தந்தையு
டன் தனியாக வீட்டில் இருந்திருக்கி
றான்.
நண்பனுக்கு இரவில் ரேடியோ கேட்கும் பழக்கம்
உண்டு. அன்றும் அப்படித்தான் ஹோலில் உட்
கார்ந்து ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தான்.
அப்போது அறையில் இந்த அப்பா திடீரென்று
நெஞ்சுவலியால் துடித்திருக்கிறார். இதை
நண்பன் கவனிக்கவில்லை. காரணம், காதில்
ஹெட்போன் மாட்டிக்கொண்டு அவன் பாட்
டுகளைக் கேட்டுக் கொண்டிருந்ததுதான்.
அப்பா தட்டுத் தடுமாறி அவனை பலமுறை
அழைத்திருக்கிறார். இது எதுவுமே அவனுக்கு
தெரியாது. பிறகு பக்கத்து வீட்டில் இருந்த ஒரு
வர்தான் ஓடோடி வந்து மருத்துவமனைக்கு
போன் செய்திருகிறார். முதல் மாரடைப்பு
என்பதால் மருத்துவர்கள் எப்படியோ அவரை
காப்பாற்றிவிட்டனர். விஷயம் தெரிந்ததும் என் பங்
குக்கு நானும் நண்பனை திட்டினேன்.
வீட்டில் வயதானவர்கள் இருக்கும்போது சற்று கவனமாக அவர்
களை பார்த்துக்கொள்ள வேண்டும் எந்த நேரத்தில் அவர்களுக்கு
உபாதை வரும் என்று சொல்லமுடியாது.



நானும் என் தோழிகளும் கடைக்கு சாப்பாடுவாங்க சென்றோம். நான் இருக்கும் அலுவலகத்தில் இருந்து சிறிது தூரத்தில்தான் ஹோட்டல் உள்ளது. அந்தப் பகுதியில் இந்த ஹோட்டல்தான் கொஞ்சம் உருப்படியானது. மேலும் அந்தப் பகுதியில் ஏகப்பட்ட அலுவலகங்கள் இருப்பதால் எல்லோரும் அந்த ஹோட்டலுக்கு சாப்பிட வருவதே வழக்கம்.

ஆனால் அன்று நாங்கள் சென்றபோது கட்டிவைத்திருந்த பார்ஸல்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்று சொல்லி ''கொஞ்சம் பொறுங்கள் பார்ஸல் கட்டித் தருகிறேன்'' என்று சொல்லி ஒருவர் உள்ளே இருந்து வந்தார்.

அடுத்த நொடியே நாங்கள் எங்களுக்கு சாப்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம்.

காரணம் சாப்பாடு கட்ட வந்த மனிதர் அத்தனை அழுக்காக இருந்தார். அதுமட்டுமா மேல் சட்டை போடாமல் வெறும் ஆப் பேண்டுடன் வியர்த்து விறுவிறுத்துப்போய் வந்த மனிதரை பார்க்கும்போதே குமட்டியது.

எத்தனை பேர் வந்து சாப்பாடு வாங்கும் இடம் கொஞ்சம் சுத்தமாக இருக்கலாமே. அல்லது வேலைக்கு என்று சிலரை நியமிக்கலாமே அதை விடுத்து இப்படி அசுத்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஹோட்டலுக்கு வருபவர்களின் எண்ணிக்கைதான் குறையும் என்பதை கருத்திற் கொள்வது நல்லது.



தகவல் தொகுப்பு
ஆர்.அபி

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# வித்யாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

## வினாத்தாள் - 01

45 நிமிடம்

**பெற்றோர்களுக்கான அன்பான வேண்டுகோள் -**

தங்கள் பிள்ளைகள் இவ் வினாப்பத்திரங்களுக்கு வீட்டில் இருந்து விடையளிக்கும் போது, மற்றவர்களின் உதவியின்றி சுயமாக விடையளிப்பதை உறுதிப்படுத்தி அவர்களின் கற்றலுக்கு உதவுங்கள்.


---


★ தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளைத் தெரிவு செய்க.

★ 1 – 34 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

★ சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான உருவைத்தெரிவு செய்க.

01. மென்மை, நறுமணம்.


1.


2.


3.

02. தொடர்பாடல், கையடக்கம்



1.


2.


3.

★ குறைந்த தொடர்புடைய உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.


03.



1.



2.


3.

04.


1.


2.


3.

★ தரப்பட்ட பாடலை வாசித்து விடைகளைத் தெரிவு செய்க.

> இளமை எங்கள் பொற்காலம்
> ஏற்றம் காண்கிற நற்காலம்
> வளம்பல கல்வியிற் சேர்த்திடுவோம் –அந்த
> மாண்பினை வாழ்க்கையில் சேர்த்திடுவோம்

05. **“ஏற்றம்”** என்பதற்கு ஒத்தகருத்தைத்தராத சொல் எது?
   1. மகிழ்ச்சி
   2. உயர்ந்த
   3. முன்னேற்றம்

06. **“மாண்பு”** என்பதற்குரிய ஒத்தகருத்துச் சொல் எது?
   1. அதிகாரம்
   2. செல்வம்
   3. பெருமை

07. **தரப்பட்ட வாக்கியத்தில் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்சோடியைத் தெரிவு செய்க.**
   **புகைவண்டி நேர அட்டவணை............ பிரயாணிகள்............**
   1. கிடைக்காமையால், மகிழ்ச்சியடைந்தனர்.
   2. மாற்றியமைக்கப்பட்டமையால், அசௌகரியமடைந்தனர்.
   3. கிடைத்தமையால், துன்பமடைந்தனர்.

★ **தரப்பட்ட பழமொழிக்குப் பொருத்தமான விளக்கத்தைத் தெரிவு செய்க.**


08. **“முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?”**
   1. கிடைக்கமாட்டாத பொருளை அடைய முயற்சிக்கக் கூடாது.
   2. முடவன் தேன் குடிக்கக்கூடாது.
   3. முடவனால் மரம் ஏறித் தேன் எடுக்க முடியாது.


09. **“காற்றுள்ள போதே தூற்றிக்கொள்”**
   1. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.
   2. நெல்லைத் தூற்றுவதற்கு காற்று அவசியம்.
   3. வீசும் காற்றினால் நெல்லையும் பதரையும் வேறாக்கிக் கொள்ளலாம்.

**பிரபல ஆசிரியர் : திரு. நா.சுவாமிநாதன்**

★ **10, 11ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட உருவிற்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க.**


10.






1. 2. 3.


11.





1. 2. 3.


12. தரப்பட்ட மூன்று தளவடிவங்களையும் பொருத்தி ஆக்கக்கூடிய உரு எது?






1. 2. 3.


13. படத்தில் உள்ள உருவை ஆக்குவதற்கு இணைக்கவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



1. 2. 3.




14. சதுரக்கடதாசியொன்றைப் பின்வருமாறு குற்றிட்ட கோட்டின் வழியே இருமுறை மடித்தால்.




A B C

பெறப்பட்ட மடித்த கடதாசி C படத்தில் காட்டியவாறு முக்கோண வடிவ உருவங்கள் வெட்டி அகற்றப்பட்டன.




கடதாசியை விரிக்கும் போது கிடைக்கும் தோற்றத்தைக்காட்டும் உரு எது?




1. 2. 3.

15. படத்தில் காட்டிய உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 08
2. 10
3. 12

16. அருகில் உள்ள கடிகாரம் வாஷிங்டனில் மாலைநேரத்தினைக் காட்டுகின்றது. வாஷிங்டனின் நேரம் இலங்கை நேரத்திலும் பார்க்க 14 மணித்தியாலம் பின்னராகவுள்ளது. இக்கடிகாரம் வாஷிங்டனில் இதே நேரத்தைக் காட்டுகின்ற போது, இலங்கை நேரம் யாது?




1. மறுநாள் அதிகாலை 3மணி
2. மறுநாள் காலை 7மணி
3. அதேநாள் அதிகாலை 3மணி

17. கீழே தரப்பட்ட ஆறு சொற்களையும் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கும் போது அவ்வாக்கியத்தின் நான்காவது சொல்லாக வருவது எது?

**வயலில், வழக்கம், லிங்கனும், சேர்ந்து, பெற்றோருடன், வேலை, செய்வது**

1. லிங்கனும்
2. வயலில்
3. வேலை

18. கீழே தரப்பட்டுள்ள நான்கு வாக்கியங்களையும் சரியாக ஒழுங்குபடுத்தினால் கருத்துள்ள பந்தியொன்று உருவாகும்.

(A) சுனாமியினால் வீடுகள் பல அழிந்தன.

(B) பிரதேச செயலர் விரைந்து செயற்பட்டு மக்களை எச்சரித்தார்.

(C) இந்தோனேசியாவில் கடலுக்கு அடியில் நில அதிர்வு ஏற்பட்டது.

(D) ஆயினும் மக்களின் உயிர் காப்பற்றப்பட்டது.

வாக்கியங்களின் சரியான ஒழுங்கு எது?

1. CBAD
2. CABD
3. CBAD

## வினாத்தாள் - 02 1 மணித்தியாலம் 15 நிமிடம்

### பகுதி II

(01) தரப்பட்ட பாடலை நன்கு வாசித்த பின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

செங்கதிரோன் ஒளிபரப்பித் திரைகடல் மேல் எழுந்தான்
சிரித்தனசெந்தாமரைகள் செந்தமிழ்நாடெங்கும்
பொங்கலின்று பொங்கலெனப் புள்ளினங்கள் ஆர்த்த
புலவர்களும் உளமலர்ந்து புதுக்கவிகள் புனைந்தார்

உழுதுண்டும் பிறர்க்கீந்தும் உலகோம்பும் ஒளியால்
உயிர்விடினும் உண்மைநிலை உலையாத வீரர்
தொழுதுண்டு வாழாத தோள்வலியை வேண்டித்
தூயசுடர்க் கதிரோனைத் தொழுகின்ற பொங்கல்

பகலவனை வரவேற்றுப் பல்லாண்டு பாடிப்
பசும்பாலில் உலைவைத்துப் பாற்பொங்கல் பொங்கி
மிகவுவகை யுடன்வந்த விருந்தினரை ஊட்டும்
மெல்லியலார் கைவளைகள் விரைந்தொலிக்கும் பொங்கல்

மழைபொழிந்து வயல்விளைந்து வறுமையின்றி மக்கள்
மகிழ்ச்சியுடன் வாழவழி வழங்கியருள் என்றே
விழைவுடனே நெஞ்சுருகி வெயிலவனை இரந்து
வேண்டுகின்ற அன்பருளம் மிகமலரும் பொங்கல்.

க. வேந்தனார்

1) இப் பாடல் எதைப்பற்றி விபரிக்கின்றது?

______________________________

2) செந்தாமரைகள் எப்பொழுது சிரித்தன?

______________________________

3) கதிரோனைத் தொழுபவர் யார்?

______________________________

4) இப்பாடலில் சூரியனைக் குறிக்கின்ற நான்கு சொற்களை எழுதுக.

______________________________

______________________________

5) பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்தைத் தரும் சொற்களைப் பாடலில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

அ) பறவைகள் ______________________________

ஆ) மகிழ்ச்சி ______________________________

6) விரைந்தொலிக்கும் என்பதனை பிரித்தெழுதுக.

______________________________

7) மக்கள் சூரியனிடம் இரந்து வேண்டுவது எது?

______________________________

(02) வெள்ளைப்பசுக்கள் புல் மேய்ந்தன. அழகிய கன்றுக்குட்டி அங்கும் இங்கும் துள்ளித் துள்ளி ஓடியது.

மேற்படி வாக்கியங்களிலிருந்து பின்வருவனவற்றிற்கு உதாரணம் எழுதுக.

1) இணை மொழி

______________________________

2) பெயர் அடைமொழி

______________________________

3) இறந்தகால ஒருமை வினைச்சொல்

______________________________

(03) பின்வரும் தொடர்களிற்குரிய தனிச்சொல்லினை எழுதுக.

1) புதிதாகக் கட்டிய கப்பலை முதன்முதலில் ஓட விடுதல்

______________________________

2) தன்நலம் கருதாது தன்பொருளை மற்றவர்களுக்கு வழங்குபவர்

______________________________

3) கப்பலை ஓட்டுபவர்

______________________________

(04) 1) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் எழுதுக.

பார்த்தபின், உறங்கினேன், சுற்றும், முற்றும், மறைவில், படுத்து, பற்றை


______________________________


2) பின்வரும் வாக்கியங்களை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

மாணவன் பால் குடித்தான்

______________________________

(05) **1) பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1. 

2. 

______________ ______________

2) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

Shall we have a cup of tea?

______________

3) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை கூறும் ஆங்கில வாக்கியத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

**நாங்கள் கடந்த வாரம் கண்டிக்குச் சென்றோம் –**

______________

(06) 1) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

**அம்மா வீட்டிற்கு வருகிறார் –**

______________

2) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக

**"பொள் மில கீய த" ?**

______________

(07) தரப்பட்ட வாக்கியத்திற்குப்பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

**ஆகா என்ன அழகான நீர்வீழ்ச்சி என்று சகானா கூறினாள்**

______________

**★ 08 முதல் 31 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

(08) விவசாயிக்கு நன்மைசெய்யும் பிராணி எது?

01. செம்பகம் 02. நத்தை
03. வெட்டுக்கிளி 04. கிளி

(09) மகாசேன மன்னன் கட்டுவித்த குளம் எது?

01. திசாவாவி 02. கலாவாவி
03. மின்னேரியாக்குளம் 04. பராக்கிரம சமுத்திரம்


(10) சந்தேகத்திற்கிடமான வெடிபொருளைக் கண்டவுடன் அறிவிக்கவேண்டிய தொலைபேசி எண் எது?

01. 119 02. 147
03.450 04. 1919

(11) இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தில் ஒர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை.

01. 11 02. 08
03. 07 04. 06

(12) அருகில் இருவகையான கப்பிகள் மூலம் சமமான நிறையுடைய சுமை உயர்த்தப்படுகின்றது. இது தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?




01. A யிலும் பார்க்க B யில் இழுப்பது இலகு
02. B யிலும் பார்க்க A யில் இழுப்பது இலகு
03. இரண்டிலும் இழுப்பது சமமான விசையால்
04. சரியாகக் கூறமுடியாது

(13) அருகில் ஒரு பறவையினுடைய தலையினதும் காலினதும் படங்கள் தரப்பட்டுள்ளன. இப்பறவை யாது?


 

01. பருந்து 02. கழுகு
03. கோழி 04. கொக்கு

(14) தற்போது நாடெங்கிலும் நிலவும் வறட்சியினால் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. இவ்வாறு நிகழ்வதை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு எடுக்கும் தீர்வுகளில் சாத்தியம் மிகவும் குறைவானது எது?

01. அதிக எண்ணிக்கையில் மரங்களை வளர்த்தல்
02. மழை நீரைத்தேக்க குளங்களை ஆழமாக்கல்
03. கடல்நீரை நன்னீராக்கல்
04. கிடைக்கும் நீரை வீண்விரயம் செய்யாது உபயோகித்தல்

(15) காட்டப்பட்ட தையல்முறை எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.



1. பொத்தான் துவாரத்தை தைப்பதற்கு
2. தடித்த துணிகளின் விளிம்பைத் தைப்பதற்கு
3. உடையின் கிழிந்த பகுதியைப் பொருத்துதல்
4. அலங்கார வேலைப்பாடு செய்தல்

(16) கையில் ஒட்டிய பலாக்காய்ப் பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தத்தக்க பொருள்

1. சவர்க்காரம் 2. குளிர்ந்தநீர்
3. தேங்காய்எண்ணெய் 4. வெந்நீர்

(17) பின்வரும் பூக்களில் இரவில் மலரும் பூ எது?

1. நந்தியாவட்டை 2. றோஜா
3. எக்சோறா 4. தாமரை

(18) தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டியது

1. பிரதேச செயலர் 2. கிராம அலுவலர்
3. பொலிஸ் அதிகாரி 4. சமாதான நீதவான்

(19) இரவில் சைக்கிள் ஓடுவோர் விபத்தைத் தவிர்ப்பதற்கு அணிய வேண்டிய உடையின் நிறம் எது?

1. கறுப்பு 2. நீலம்
3. வெள்ளை 4. மஞ்சள்



அழகு...,
உடல் நலம்...,
குழந்தை வளர்ப்பு
சாதனை மகளிர்...,
ஆலோசனை...,
உளவியல்...,


# சிநேகிதியே



## அழகுக் குறிப்புகள்

* கடலைமாவும், கோதுமை மாவும் சரிசமமாக எடுத்து நன்கு சலித்து காய்ச்சிய பாலைக்கொண்டு விழுது தயாரித்து முகம், கை, கால்களில் தடவி குளித்தால் அழகுக்கு அழகு சேர்க்கும். அழுக்கும் வெளியேறும்.
* பாதாம் பருப்பை காய வைத்து பொடித்து ஒலிவ் ஆயில் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் வைத்து கழுவி விட முகம் பொன் போல் மின்னும்.
* தயிருடன் சிறிது எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி காய்ந்ததும் எடுத்து விட முகம் பளிச்சென இருக்கும். பவுன்டேஷன் இல்லாமலேயே மேக்கப் போடலாம்.
* கஸ்தூரி மஞ்சளுடன், பயத்தம் மாவும் கலந்து உடல் முழுவதும் தேய்த்துக் குளித்தால், நல்ல வாசனையும் மென்மையும் ஏற்படும். முகத்திற்கு சுத்தமான கஸ்தூரி மஞ்சளையே உபயோகப்படுத்தவும்.

## தையல் பயிற்சி • • • • • நெக் டிசைன்



தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :-
திருமதி. ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை

# நம் கால்களை பராமரிக்க

பொதுவாக பெண்களைப் பொறுத்தவரை அவர்களது உடலில் உள்ள ஒவ்வொரு பகுதிகளுக்கும் தனித் தனியாக அக்கறை கொள்வதே இல்லை. ஆயினும், சில பெண்கள் தம் உடல் அழகைப் பேணுவதில் ஒரு சிறிய விடயத்திலும் கூட மிகுந்த அக்கறை கொள்வதையும் நாம் பார்த்திருக்கின்றோம் என்கின்றார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

அந்த வகையில் சிலர் அதிகம் அவதிப்படும் விடயம் காலில் ஏற்படும் பித்தவெடிப்பாகும். இது சிலரது உடல் உஷ்ணத்தினால் ஏற்படும் வறட்சியினால் உண்டாவது என்கின்றனர். எதுவாக இருந்தாலும் இதற்கான தீர்வு இல்லாமலில்லை. வீட்டில் செருப்பு அணிய பிடிக்காதவர்கள், அதிக எடை உள்ளவர்கள், வறண்ட சருமம் உள்ளவர்கள், அதிக அழுக்கான இடங்களில் நடப்பவர்கள், தோட்டவேலை செய்பவர்கள் என்று எல்லோருக்குமே இது பொதுவாக இருக்கின்றது.

முதலில் இந்த வெடிப்புகளை எப்படி நீக்குவது என்பதை பார்க்கலாம்.



இதற்கு சிறந்த ஒரு அழகு சிகிச்சையான பெடிக்யூர் முறையினைக் கையாளலாம். முதலில் நெயில் பாலீஷை ரிமூவ் செய்து, நகங்களை வெட்டிக் கொள்ள வேண்டும். கால்கள் அதிக நேரம் தண்ணீரில் ஊறினால்தான் ஸ்க்ரப்பிங் செய்வது எளிது. கடினமான தோல்களை எளிதில் நீக்கலாம். அந்த காலம் போல இப்போது அதிக நேரம் செலவழித்து, துணியெல்லாம் துவைத்துப் பிறகு குளிப்பதற்கு நேரம் இல்லை. அதனால் கால்கள் நெடுநேரம் தண்ணீரில் ஊறுவதற்கு வாய்ப்பில்லை. இதற்கு மாற்றுச் செயற்பாடாகத்தான் இந்த பெடிக்யூர் மூலம் கால்களை நெடுநேரம் சுடுதண்ணீரில் ஊறவைத்து பிறகு தேய்க்கிறார்கள். அதனால் வீட்டிலேயே பெடிக்யூர் செய்ய நினைப்பவர்கள், அதற்காக தலைகுளிக்கும் நாளை தேர்ந்தெடுத்தல் நல்லது. நாம் குளித்துமுடிக்கும்போது நமது கால்கள் தண்ணீரில் நன்றாக ஊறியிருக்கும். சனி நோயுள்ளவர்கள் சுடு தண்ணீரில் திரவ சோப் ஊற்றி அதில் கால்களை ஊறவைக்கலாம். பின் சந்தைகளில் விற்பனையாகும் ஸ்கரப்பர் கொண்டு ஸ்கரப் செய்து கொள்ளலாம்.



தனு ரசாக்

கால்களில் அதிகமான வெடிப்பு உள்ளவர்கள், வெடிப்பு நீக்க கிறீம்கள் உபயோகிக்கும்போது, இரவு தூங்கும்போது நன்றாக கால் வெடிப்புகளில் அந்த மருந்துகளை தடவி, ஒரு சாக்ஸ் அணிந்துக் கொண்டு உறங்கச் சென்றால் சிறந்த பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் தேய்க்கும் அத்தனை மருந்தும் படுக்கையில்பட்டு பாழாகுவதோடு, கால்கள் குணமாகவும் நாளாகும். எப்போதும் அழகான தோற்றத்தில் இருக்க முகம் மட்டுமல்ல, கை கால்களும் நல்ல பராமரிப்பில் இருப்பது அவசியம்.

அத்தோடு நாம் அணியும் பாதணிகளில் மிகுந்த அக்கறைகொள்ளவேண்டும். சிலருக்கு அதிக குதிக்கால் உயர்ந்த பாதணிகள் அணிய ஆசையிருக்கும். ஆயினும், இந்த உயர்குதிக்கால் பாதணிகள் சிலநேரம் உடலுக்கும் ஆபத்தை விளைவிக்கும். இறுக்கமான பாதணிகளை அணியாமல் நல்ல காற்றோட்டமுள்ள சிறந்த காலுக்கு மென்மையான தோல்களிலான பாதணிகளை வாங்கி அணியுங்கள்.

எஸ்.பிரியதர்ஷினி



## பாடல்

படம்:- தீயா வேலை செய்யனும் குமாரு
இசை:- சி.சத்யா
பாடல்வரிகள்:- பா.விஜய்
பாடியவர்கள்:- சி.சத்யா, ராணி ரெட்டி

அழகென்றால் அவள் தானா
அழகுக்கே அழகானா
அவள் பார்த்த பார்வையிலே
அழகாக தொலைந்தேனா
அழகென்றால் அவள் தானா
அழகுக்கே அழகானா
அவள் பார்த்த பார்வையிலே
அழகாக தொலைந்தேனா

நீ யாரடி என் செல்லமே உன்
புன்னகை உயிர் கொல்லுமே
ஒரு நொடியில் சரிந்தேனா அடி
மனதில் திரனா திரனா திரனா

(அழகென்றால் அழகென்றால் )

ஓ.. நேற்றெல்லாம்
இதுபோல் இல்லை
இன்று தான் இந்தத் தொல்லை
காரணம் தேடினேன் நீ தானே
நண்பனை தள்ளச் சொன்னேன்
தனிமையில் பேசிச் சென்றேன்
என்னமோ செய்தாய் நீ தானே

ஓ... சஞ்சனா... ஓ... சஞ்சனா...
என் நெஞ்செல்லாம் தினம் சஞ்சனா...
உன் கண்ணில் சாய்ந்தெனா ஓ...

(அழகென்றால் அழகென்றால்)

ஓ... தேவைகள் ஏதும் இல்லை
தேடவே ஒன்றும் இல்லை
இன்று நான் தெம்பாய் இருந்தேனே
தேவதை உன்னைக் கண்டேன்
தேயிலை கண்ணைக் கண்டேன்
இன்று என் தவறை உணர்ந்தேனே
(ஓ... சஞ்சனா...)



ஹன்சிகாவிற்கு சிவப்பு நிறம் ரொம்பப் பிடிக்கும். இதனால் சிவப்பு நிறத்தில் பொருட்களை வாங்கிக் குவிக்கிறாராம்.



கும்கி, சுந்தரபாண்டியன், குட்டிப்புலி என வரிசையாக வ
நடித்து வந்தவர் லட்சுமி மேனன். அவர் முதன்முறையாக,
சிப்பாய் படத்தில் மொடர்ன் டிரஸ் அணிந்து வருகிறார். ே
நடித்த படங்களில் ஹீரோக்களிடம் நெருக்கம் காட்டாத ல
இப்படத்தில் கௌதமுடன் அதிக நெருக்கமாக நடித்திருப்
பாடல்களில் செம ஆட்டமும் ஆடியுள்ளார்.



✱ இளையராஜாவின் இசைதான் எனக்கு உயிர் என்று சொல்லும் தனுஷ் அவரது இசையில் பாட ஆசைப்படுகிறார்.

✱ காகிதம், பேனா பயன்படுத்தாமல் செல்போன் மூலம் பாடல் எழுதுகிறார் தனுஷ்.

## நடிகையர் சம்பளப் பட்டியலில் நயன்தாரா, அனுஷ்கா முதல் இடம்

நயன்தாரா, அனுஷ்கா ஆகியோரின் சம்பளம் ரூ.2 கோடியாக உயர்ந்துள்ளது. இதுவரை எந்தவொரு தமிழ், தெலுங்கு நடிகையும் இவ்வளவு தொகை வாங்கியது இல்லை. இருவருக்கும் மார்க்கெட் உச்சத்தில் உள்ளது. எனவே சம்பளத்தை வரலாறு காணாத அளவு ஏற்றியுள்ளனர். நயன்தாரா தெலுங்கில் நடிக்கும் அனாமிகா படத்துக்காக இந்தச் சம்பளம் வழங்கப்படுகிறது. இப்படம் இந்தியில் ஹிட்டான கஹானி என்ற படத்தின் ரீமேக் ஆகும். இந்தியில் வித்யாபாலன் கர்ப்பிணி வேடத்தில் நடித்து இருந்தார். அதே கேரக்டரில் நயன்தாரா நடிக்கிறார். கர்ப்பிணியாக நடிப்பதற்காகவே ரூ.2 கோடியை அள்ளிக் கொடுத்துள்ளனர். இதுபோல் அனுஷ்கா ருத்ரமாதேவி என்ற சரித்திரப் படத்தில் நடிக்க ரூ.2 கோடி பெற்றுள்ளார். இதில் அனுஷ்கா மகாராணி வேடத்தில் வருகிறார். இதற்காக வாள் சண்டையும் கற்றுள்ளார். தமிழ், தெலுங்கு ரசிகர்கள் இரு நடிகைகளையும் கனவுக் கன்னியாக வைத்துக் கொண்டாடுவதை சம்பள உயர்வு வெளிப்படுத்தி உள்ளது என்கின்றனர்.



சினி



அன்னக் கொடியும் கொடி வீரனும் படத்தில் தன் மகள் கார்த்திகாவின் நடிப்பைப் பார்த்து அசந்து போன ராதா, இயக்குநர் பாரதிராஜாவின் கைகளைப் பிடித்து கண்கலங்கி விட்டாராம்.



## வினய் படத்தை டீலில் விட்ட பிந்து மாதவி!

விமலுக்கு ஜோடியாக கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்தில் நடிப்பதற்கு முன்பே வினய்க்கு ஜோடியாக, 'இருவர் உள்ளம்' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தார் பிந்து மாதவி. ஆனால், 'விமல் படத்துக்கு போக மிச்சம் கால்ஷீட் இருந்தால்தான் வினய் படத்துக்கு தருவேன்...' என்று சொன்ன நடிகை அதையடுத்து, அதே விமலுடன் 'தேசிங்கு ராஜா' படத்திலும் நடிக்க ஒப்பந்தமானதால் வினய் நடிக்கும் படத்தை டீலில் விட்டுவிட்டார். இதனால், இப்போது பிந்து மாதவியை அப்படத்தில் இருந்து நீக்கிவிட்டு, மும்பை அழகி ஒருவரை, புக் செய்து இருவர் உள்ளம் படப்பிடிப்பை நடத்தி வருகின்றனர்.

## லட்சுமி ராமகிருஷ்ணன் இயக்கத்தில் மதுபாலா



நடிகை லட்சுமி ராமகிருஷ்ணன் இயக்கும் புதிய படத்தில் நடிகை மதுபாலா நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆரோகணம் என்ற படத்தை எடுத்து திறமையான இயக்குநர் என்று பெயரெடுத்தவர் நடிகை லட்சுமி ராமகிருஷ்ணன். இந்தத் திரைப்படத்தில் விஜி சந்திரசேகர் நடித்திருந்தார். பல இயக்குநர்கள், விமர்சகர்கள் பாராட்டிய இந்தப் படம் சமீபத்தில் விஜய் விருது விழாவில் சிறப்பு விருதினை பெற்றது. சிறிய இடைவெளிக்குப் பின்பு இரண்டாவது படம் ஒன்றை இயக்க ஆரம்பித்துள்ளார் நடிகை லட்சுமி ராமகிருஷ்ணன். இந்தப் படத்தில் ரோஜா, ஜென்டில்மேன் படத்தில் நடித்த நடிகை மதுபாலா நடிக்கவுள்ளார்.

...ரிசையாக வில்லேஜ் கெட்டப்பில்
...முறையாக, கடல் கௌதமுடன்
...ருகிறார். மேலும் இதற்கு முன்
...காட்டாத லட்சுமி மேனன்,
... நடித்திருப்பதோடு, டூயட்

...கு உயிர்
...சையில்





# மொடர்ன் நடிகையாகும் லட்சுமி மேனன்!

## டி.ராஜேந்தர் போட்ட குத்தாட்டம்!

'கண்ணா லட்டு தின்ன ஆசையா' படத்தை தயாரித்த ராம நாராயணன் இப்போது பவர் ஸ்டாரை நாயகனாக வைத்து ஒரு படத்தை இயக்கியுள்ளார். அவர் சிறையில் இருந்த போதும் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் அனைத்தையும் படமாக்கி விட்டார் ராம நாரர்யணன். இதற்கிடையே இப்படத்திற்காக டி.ராஜேந்தரை வைத்து ஒரு குத்துப்பாடலை பதிவு செய்துள்ளனர். அப்போது, ''இந்தப் பாடலில் நானே ஆடுகிறேன்...'' என்று டி.ஆர். சொல்ல, சில நடன அழகிகளுடன் டி.ஆரை குத்தாட்டம் ஆட வைத்து படமாக்கியுள்ளனர். சிம்புவே தோற்றுப்போகும் அளவுக்கு செம ஆட்டம் போட்டுள்ளார் டி.ஆர்.



பத்தாம் வகுப்பில் தேர்வான துளசி, லட்சுமி மேனன் இரு வரும் தபால் மூலம் பிளஸ் டூ படிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

* நாய் பொம்மைகள் என்றால் அமலாபா லுக்கு உயிர். வெளிநாடு சென்றால் முதலில் அதைத்தான் வாங்குவாராம்.



# அனுஷ்காவிற்கு முகவெட்டு இல்லையா?

தமிழ் சினிமா கைவிட்டதால் மீண்டும் தெலுங்குக்கே சென்றுவிட்டார் அனுஷ்கா. அங்கிருந்தபடியே தமன்னா, இலியானா பாணியில் பொலிவூட்டில் கால் பதிக்க முயற்சி எடுத்து வருகிறார்.

ஆனால், இந்திப்பட இயக்குநர்களிடம் சான்ஸ் கேட்ட போது, இந்தி ரசிகர்களை கவரும் வகையில் உன் முகவெட்டு இல்லை என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லி விட்டனர். இதனால், மனமொடிந்து போயுள்ளார் அனுஷ்கா.





## விஜயின் பாராட்டு!

ரஜினி பாணியில் இப்போது விஜயும் தன் அபிமானிகள் இயக்கும் படங்களை பார்த்து, பாராட்டத் துவங்கியுள்ளார். அந்த வகையில், தன்னை வைத்து ப்ரியமுடன், யூத் படங்களை இயக்கிய வின்செண்ட் செல்வாவை அவரின் தற்போதைய படமான துள்ளி விளையாடு படத்தை பார்த்து வெகுவாக பாராட்டியுள்ளார். விஜயின் பாராட்டு, படத்தை வெற்றி பெறச் செய்யும் என்று காத்திருக்கிறார் வின்செண்ட் செல்வா.



# அமீர்கானுக்கு சம்பளம் 88 கோடி ரூபாய்!

சமீபகாலமாய் விளம்பர படங்களில் நடிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் பொலிவூட் நடிகர் - நடிகைகள். குறிப்பாக, ஷாரூக்கான், சல்மான்கான், அமீர்கான், பிரியங்கா சோப்ரா, கத்ரீனா கைப், கஜோல் என விளம்பர ஆர்வலர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஒரு கட்டுமான நிறுவனம் 10 கோடி ரூபாவுக்கு கரீனா கபூரையும், மிகப்பெரிய நிறுவனம் ஒன்று 88 கோடி ரூபாவுக்கு அமீர்கானையும் ஒப்பந்தம் போட்டு வைத்துள்ளனர்.



## பாடல்

படம்: முந்தானை முடிச்சு
இசை: இளையராஜா
பாடியவர்கள்: பாலசுப்ரமணியம், S.ஜானகி
பாடல்வரிகள்: முத்துலிங்கம்

ஆரிராரிரோ... ஆரிராரிரோ...
ஆரிராரிரோ... ஆரிராரிரோ...
ஆரிராரிரோ... ஆரிராரிரோ...

சின்னஞ்சிறு கிளியே
சித்திரப் பூவிழியே
சின்னஞ்சிறு கிளியே
சித்திரப் பூவிழியே
அன்னை மனம் ஏங்கும்
தந்தை மனம் தூங்கும்
நாடகம் ஏனடா நியாயத்தை கேளடா
சின்னஞ்சிறு கிளியே...

சுகமே நினைத்து சுயவரம் தேடி
சுழல்மேல் தவிக்கும்
துயரங்கள் கோடி
மழை நீர் மேகம் விழிகளில் மேவும்
இந்த நிலை மாறுமோ
அன்பு வழி சேருமோ
கண்கலங்கி பாடும் எனது பாசம்
உனக்கு வேஷமோ
வாழ்ந்தது போதுமடா வாழ்க்கை
இனிமே...சின்னஞ்சிறு...

சின்னஞ்சிறு கிளியே
சித்திரப்பூவிழியே
சின்னஞ்சிறு கிளியே
சித்திரப்பூவிழியே
உன்னை எண்ணி நானும்
உள்ளம் தடுமாறும்
வேதனை பாரடா வேடிக்கை தானடா
சின்னஞ்சிறு கிளியே...

மயிலே உன்னை நான்
மயக்கவும் இல்லை
மனதால் என்றும்
வெறுக்கவும் இல்லை
என்னை நீ தேடி இணைந்தது பாவம்
எல்லாம் நீயே எழுதிய கோலம்
இந்த நிலை காணும் பொழுது
நானும் அழுது வாழ்கிறேன்
காலத்தின் தீர்ப்புகளை
யாரறிவாரோ... ஓ
(சின்னஞ்சிறு கிளியே)
சின்னஞ்சிறு கிளியே...



நல்ல கதை அமைந்தால், நேரடியாக மலையாளப் படத்தில் நடிப்பதாக சூர்யா அறிவித்துள்ளார்.

Black
Colour: Cyan Magenta




ஒரு ஊரில் ராமசாமி என்ற சுயநலமிக்க செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஊருக்கு சென்று திரும்பும் வழியில் 30 தங்க நாணயங்கள் இருந்த பையை தொலைத்துவிட்டார். இதனால் வருத்தமடைந்த செல்வந்தர் தனது நண்பர் குருவிடம் நடந்ததைக் கூறி புலம்பினார்.

சில நாட்கள் கழித்து குரு ஊரிலிருந்து திரும்பும் போது வழியில் ஒரு பையில் தங்க நாணயங்கள் இருப்பதைக் கண்டார். அந்த பை ராமசாமியுடையது என தெரிந்துகொண்ட குரு அதை அவரிடம் கொடுத்தார்.

குருவிடமிருந்து தங்க நாணயங்களை பெற்றுக் கொண்ட ராமசாமி, இதை வைத்து ஒரு திட்டம் தீட்ட நினைத்தான். அவன் குருவிடம், நான் இந்த பையில் 40 தங்க நாணயங்களை வைத்திருந்தேன். இந்த பையில் இப்போது 30 தங்க நாணயங்களே உள்ளன, அதனால் மீதமிருக்கும் 10 நாணயங்களை திருப்பித் தரவேண்டுமென குருவிடம் கூறினார்.

குருவோ மிகவும் நல்லவர். பிறரின் பொருட்களுக்கு ஆசைப்படாத அவரது குணத்தை பற்றி அனைவருக்கும் தெரியும்.

இதனால் இந்த குழப்பத்திற்கு முடிவுகட்ட நண்பர்கள் இருவரும் ஊர் தலைவரிடம் சென்றனர். விவரத்தை கேட்ட ஊர் தலைவர், ராமசாமியிடம், நீ எவ்வளவு தங்க நாணயங்களை தொலைத்தாய் என கேட்டார். அதற்கு அவர் 40 தங்க நாணயங்கள் என பொய் கூறினான். இப்போது ஊர் தலைவர் குருவை பார்த்து நீ கண்டுபிடித்த தங்க நாணயங்களை எவ்வளவு என்றார். அதற்கு அவர் 30 தங்க நாணயங்கள் என்றார்.

இருவரின் பதிலையும் கேட்ட ஊர்தலைவர் ராமசாமியை பார்த்து, குரு கண்டறிந்திருப்பது வெறும் 30 தங்க நாணயங்கள், நீ தொலைத்திருப்பதோ 40 தங்க நாணயங்கள். எனவே இது உன்னுடையதாக இருக்க முடியாது. இனி யாராவது 40 தங்க நாணயங்களை கொண்டு வந்தால் உனக்கு சொல்லி அனுப்புகிறேன், இப்போது நீ கிளம்பலாம் என்றார்.

இப்போது குருவை பார்த்த தலைவர் நீங்கள் கண்டுபிடித்திருப்பது ராமசாமியின் தங்க நாணயங்கள் கிடையாது, எனவே இதை நீங்களே வைத்து கொள்ளலாம் என்றார்.

திருடனுக்கு தேள் கொட்டிய கதை போல, ஊர் தலைவரின் தீர்ப்பை கேட்ட ராமசாமிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தான் கூறிய பொய்யால் தனக்கு நேர்ந்த சங்கடத்தை எண்ணி வருத்தப்பட்டார். தனது தவறை உணர்ந்த அவர்,

இனி சுயமில்லாத நேர்மையான மனிதராக வாழவேண்டும் என முடிவுசெய்தார்.




ஒரு முனிவர் ஒரு அரசனிடம் மரணத்தை வெல்லும் அபூர்வக் கனி ஒன்றைக் கொடுத்தார். அப்போது அருகிலிருந்த காவலாளி அதை அவரிடமிருந்து பறித்துச் சாப்பிட்டு விட்டான். கோபமுற்ற அரசர் அவனுக்கு மரண தண்டனை விதித்தார்.''

''இறவாக்கனியை உண்ட என்னை உங்கள் தண்டனை ஒன்றும் செய்ய முடியாது. என்றான் காவலாளி.''

தவறு செய்தவனுக்குத் தண்டனை என்பதை யாராலும் மாற்ற முடியாது. இது சாதாரண பழம். எப்படி உன் உயிரைக் காக்கும்?'' என்று அரசன் கேட்டான்.

சாதாரணமான பழம் என்றால் அதைத் தின்ற எனக்கு நீங்கள் ஏன் மரண தண்டனை அளிக்க வேண்டும்? என்று காவலாளி வினவினான்.

அவனது புத்திக் கூர்மை அரசனை வியக்க வைத்தது. அவனைத் தனது மந்திரியாக்கிக் கொண்டான்.

## உங்களுக்கு தெரியுமா?

1. மூளையைவிடப் பெரிதான கண்களைக் கொண்ட பறவை - நெருப்புக் கோழி
2. நாக்கால் காதை சுத்தம் செய்யும் விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
3. நான்கு மூக்குகளை உடைய உயிரினம் - நத்தை
4. நீல நிறத்தை பார்க்கும் சக்தியுடைய ஒரே பறவை - ஆந்தை
5. வயிற்றில் நான்கு பகுதிகளைக் கொண்ட விலங்கு - மாடு
6. நீரை அருந்தாத நீர்வாழ் உயிரினம் - டொல்பின்
7. நுரையீரல் இல்லாத உயிரினம் - எறும்பு
8. பின்பக்கமாகவும் பறக்கக்கூடிய பறவை - ஹம்மிங் பறவை
9. துருவக் கரடிகள் எந்தக் கையை அதிகம் பயன்படுத்தும்? - இடது கை.
10. பற்கள் இல்லாத பாலூட்டி இனம் - எறும்புதின்னி
11. நட்சத்திர மீன்களுக்கு எத்தனை கண்கள்? - எட்டு
12. மூன்று இதயங்களைக் கொண்ட கடல்வாழ் உயிரினம் - ஒக்டோபஸ்
13. உலகில் மிகவும் விஷத்தன்மையுடைய மீன் - ஸ்டோன் ஃபிஷ்
14. தலையில் இதயத்தைக் கொண்டுள்ள கடல்வாழ் உயிரினம் - இறால் மீன்
15. உலகின் மிகப் பெரிய பாலூட்டி இனம் - நீலத் திமிங்கிலம்.

## புதிர் கணக்கு!

ஒரு குளத்தில் பெரிய தாமரைப் பூக்கள் அழகாக மலர்ந்திருந்தன. அந்தக் குளத்தை நோக்கி சில பறவைகள் வந்தன. குளத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்கள் பறவைகளை கவர்ந்தன.

ஒவ்வொரு தாமரைப் பூவும், பட்டு சிம்மாசனம் போல இருக்கிறது. ''நாம் கொஞ்சம் நேரம் இந்தப் பூக்களில் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டு, பிறகு போகலாம்'' என்று ஒரு பறவை கூறியது.

அதை மற்ற பறவைகள் ஏற்றுக் கொண்டன.

உடனே, ஒவ்வொரு பூவிலும் ஒரு பறவை வீதம் உட்கார்ந்தன. அவ்வாறு உட்கார்ந்த போது, ஒரு பறவைக்கு பூ கிடைக்கவில்லை. அதனால், பறவைகள், ஒரு பூவுக்கு இரண்டு பறவைகள் வீதம் உட்காரலாம் என்று முடிவு செய்தன. அதன் படி, ஒவ்வொரு பூவுக்கும் இரண்டாக உட்கார்ந்தன. அப்படி உட்கார்ந்த போது ஒரு பூ மீதம் இருந்தது.

அப்படியானால், குளத்தில் இருந்த பூக்கள் எத்தனை? அதில், உட்கார வந்த பறவைகள் எத்தனை? என்று கண்டுபிடிங்க பார்க்கலாம்!

இதற்கான விடையை
05 பக்கம் பார்க்க...

## இந்த வார குட்டீஸ்



பெயர்: முகமட் அப்ரத்
பெற்றோர்: முகம்மது அல்ஹான், சம்சாத் பேகம்,
இடம்: திருகோணமலை.



பெயர்: அபிஷான்
பெற்றோர்: மோகன செல்வம், விஜயா.
இடம்: சென்கூம்ஸ், தலவாக்கலை.

(20) திருகோணமலை கடலில் கலக்கும் ஆற்றின் பெயர் எது?

1. களனிகங்கை  2. மாதுறுஓயா

3. தெதுறுஓயா  4. மகாவலிகங்கை

(21) பின்வரும் விலங்குகளில் நாக்கை வெளியே நீட்டி பூச்சியைப் பிடிக்காத விலங்கு எது?

1. பல்லி  2. பாம்பு

3. பச்சோந்தி  4. தவளை

(22) இவ்வாண்டு பொதுநலவாய மாநாடு எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?

1. இலங்கை  2. இந்தியா

3. பாகிஸ்தான்  4. மாலை தீவு

(23) காட்டுக்கோழி தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?

1. காட்டுக்கோழி இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தென்கிழக்காசியா ஆகிய நாடுகளில் காணப்படும்.
2. காட்டுக்கோழியில் சிவப்பு, பச்சை, நரைநிறம், இலங்கைச் சிவப்புக்கோழி ஆகிய நான்கு இனங்கள் உண்டு.
3. இலங்கையில் காணப்படும் இலங்கை சிவப்புக்காட்டுக் கோழி இலங்கைக்கு மட்டும் உரித்தானது.
4. இலங்கையில் உள்ள காட்டுக்கோழி இனம் இந்தியாவிலும் உண்டு.

(24) சூரிய நமஸ்காரத்தின் நான்கு பழமுறைகள் தரப்பட்டுள்ளன. இதில் எது சூரிய நமஸ்காரத்தின் நான்காவது பழமுறையாகும்


1. 

2. 

3. 

4. 

(25) ஆசிரியர் செய்து காட்டிய பரிசோதனையின் ஒழுங்கு ஒன்று படம் மூலம் காட்டப்பட்டுள்ளது. இங்கு திரையில் தோன்றுவது யாது?




1. ஒளிப்பொட்டு
2. ஒளிவட்டம்
3. தொலைவிலுள்ள மரங்களின் விம்பம்
4. ஏழுநிற ஒளியின் பட்டை [திரிசியம்]

(26) காற்றினால் பரவும் வித்துக்களின் கூட்டம் எது?

1. தென்னை, தேக்கு, மா
2. சீதேவியார்செங்கழுநீர், மூக்குத்திப்பூண்டு, எருக்கலை
3. பலா, மா, புலிநகம்.
4. வெழுபலவன், கனகாம்பரம், பயறு

(27) நெல் வயலில் வரம்பு ஓரம் மரப்பலகை அல்லது தென்னம்மட்டையினால் ஆன இருக்கை நாட்டப்படுவது வழக்கம். இதற்கான காரணம் எது?

1. பறவைகள் வந்து அமர்ந்து பூச்சிகளைப் பிடிப்பதற்கு
2. தவளைகள் வந்திருந்து பூச்சிகளைப் பிடிப்பதற்கு
3. ஆந்தைகள் வந்தமர்ந்து எலிகளைப் பிடிப்பதற்கு
4. உழவர்கள் தங்கள் உபகரணங்களை வைப்பதற்கு

(28) உமது அயலவர் உமது வீட்டு வாசலில் தினமும் குப்பையைப் போடுகின்றார். அது தொடர்பாக நீங்கள் காட்டும் உறுதியான வெளிப்பாடு எது?

1. கிராம அலுவலகரிடம் சென்று முறையிடுதல்.
2. அவருடன் சண்டை பிடித்தல்
3. குப்பைகள் போடுவதால் இருவருக்கும் ஏற்படும் இடையூறுகளை மென்மையாக எடுத்துக் கூறி அவராகவே அச்செயலைச் செய்வதைத் தவிர்க்கச் செய்தல்.
4. ஏன் அவரிடம் வீண் வம்புக்குப் போவான் என்று அமைதியாக இருத்தல்.

(29) அருகில் காட்டப்பட்டுள்ள குறியீடு எதனைக் குறிக்கும்?



1. கர்ப்பிணித்தாய்மார்  2. வயதுவந்தவர்

3. சிறுகுழந்தைகள்  4. வலதுகுறைந்தவர்


(30) துருத்தி பயன்படுத்தப்படும் தொழில் எது?

1. மட்பாண்டம்வனைதல்  2. தச்சுவேலை


3. இரும்புத்தொழிலகம்  4. மேசன்வேலை

(31) நீரில் பொருட்களைப் போடும் போது, அவை காணப்படும் தோற்றங்களில் தவறானது.

1. A மட்டும்
2. C மட்டும்
3. Aயும் Bயும்
4. Bயும் Cயும்




(32) இரண்டு மின்கலங்களும், இரண்டு மின்குமிழ்களும் ஐந்து கடத்திகளும் தரப்பட்டுள்ளன. படத்தில் காட்டப்பட்டுள்ள இரண்டு மின்குமிழ்களையும் கூடிய பிரகாசத்துடன் ஒளிரும் முறையில் எவ்வாறு இணைப்பீர் என்பதை வரைந்து காட்டுக.




★ சில கருவிகளின் படங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ் உபகரணங்களின் பயன்பாட்டினைக் மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக..

| | |
|---|---|
| (1) மரத்தைக்குடைதல் | (2) திருகாணியைக்கழற்றுதல் |
| (3) தகரமூடி வெட்டித்திறப்பி | (4) ஆணியைக் கழற்றுதல் |
| (5) இரும்பை அறுத்தல் | (6) கத்தியைக்கூராக்குதல் |
| (7) மரத்தில் துளையிடல் | (8) கிடைமட்டத்தை உறுதிப்படுத்தல் |

(33)  (34)  (35)  (36)  (37) 

விடை தருக.

(38) அருகில் உள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசமத்தில் தருக.



(39) இலத்திரனியல் தராசு ஒன்றில் பப்பாசிப்பழம் ஒன்றினை வைத்த போது, அதன் வாசிப்பைப்படம் காட்டுகின்றது. பப்பாசிப்பழத்தின் நிறையைக் காண்க.


| 0 | 0 | 0 | 2 | . | 4 | 5 | 0 | kg |
|---|---|---|---|---|---|---|---|---|

(40) இலங்கையின் தற்போதைய சனத்தொகை 2 கோடி 8 இலட்சத்து 69 ஆயிரம் ஆகும். சனத்தொகையைக்குறிக்கும் எண்ணின் எண்குறியை எழுதுக.

(41) பின்வரும் பின்னங்களில் 1 /4 சமவலுப்பின்னமாக அல்லாத பின்னத்தைச் சுற்றி வட்டமிடுக.

2/8 3/9 3/12 5/20

(42) தரப்பட்ட உருக்கள் இரண்டிலும் கூடிய சுற்றளவு எது? அதன் சுற்றளவு மற்றதிலும் பார்க்க எவ்வளவு கூட





(43) 2082 உடன் 460ஐ கூட்டுக.

(44) 3.0 l பழரசத்துடன் 8.5 l நீர் கலக்கப்பட்டு குளிர்பானம் தயாரிக்கப்பட்டது. இது 100 குவளைகளில் சமனாக ஊற்றப்பட்டது. ஒரு குவளையில் உள்ள குளிர்பானத்தின் கனவளவு எத்தனை ml?


(45) இரண்டு நண்பர்கள் 400 அப்பிள் பழங்களை ஒன்று ரூபா 12 வீதம் வாங்கிச் சமனாகப் பங்கிட்டனர். ஒருவன் தன்னிடம் உள்ள அப்பிள் முழுவதையும் ஒன்று ரூபா 15வீதம் விற்றான். மற்றவன் தனது அப்பிள் பழங்களை ஒன்று ரூபா 16 வீதம் விற்றான். அவர்கள் இருவருக்கும் கிடைத்த மொத்த இலாபம் யாது?

(46) அருகில் உள்ள உருவில் சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



(47) மகளின் நிறையிலும் பார்க்க தந்தையின் நிறை மூன்று மடங்கு ஆகும். இருவரின் நிறையின் கூட்டுத்தொகை 96kg ஆயின் , தந்தையின் நிறை யாது?

(48) தரம்-05 மாணவர்கள் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் விருப்பத் தேர்வு தொடர்பான தகவல் சேகரிக்கப்பட்டு வட்டவரைவு வரையப்பட்டது. அவ்வகுப்பு மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 48 ஆகும்.




**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. கார்ட்டூனை விரும்பிப் பார்க்கும் மாணவர்கள் எத்தனை?
2. சிறுவர் நிகழ்ச்சியை விரும்பிப் பார்க்கும் மாணவர்கள் எத்தனை?

(49) டென்மார்க்கிற்கு விமானம் மூலம் தபால் அனுப்புவதற்குரிய கட்டணம் வருமாறு, முதல் 10g நிறையுள்ள கடிதத்திற்கு ரூபா.120 அறிவிடப்படும். மேலதிக ஒவ்வொரு 10g இற்கும் அல்லது அதன் பகுதிக்கு கட்டணம் ரூபா. 15அறவிடப்படும் 45g நிறையுள்ள கடிதமொன்றை அனுப்புவதற்கு ஒட்டவேண்டிய முத்திரைகளின் முழுப் பெறுமதி யாது?

(50) தரப்பட்ட பந்தியை வாசித்த பின் அதனைத் தொடர்ந்து என்ன நிகழ்ந்திருக்கும் என்பதனை விபரிக்கும் ஆறு வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

**அன்று பாடசாலை மைதானத்தில் நாம் விளையாடிக் கொண்டிருந்தோம். வெளியே சென்ற பந்தை எடுப்பதற்காக வீதிக்கு வந்த போது பாதையில் ஏதோ ஒன்று பளபளவென மின்னிக் கொண்டிருந்தது நாம் கிட்டப்போய் பார்த்த போது..........**

1.

## கல்விக்குரல் 15 இற்கான விடைகள் பகுதி - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) 01 | 02) 02 | 03) 01 | 04) 03 | 05) 03 | 06) 01 |
| 07) 01 | 08) 03 | 09) 03 | 10) 03 | 11) 02 | 12) 01 |
| 13) 03 | 14) 01 | 15) 01 | 16) 03 | 17) 03 | 18) 01 |
| 19) 01 | 20) 03 | 21) 02 | 22) 01 | 23) 02 | 24) 01 |
| 25) 01 | 26) 01 | 27) 03 | 28) 02 | 29) 02 | 30) 03 |
| 31) 01 | 32) 03 | 33) 03 | 34) 03 | 35) 03 | 36) 03 |
| 37) 33kg | 38) 64 | 39) 05 | 40) கதிரை, திகதி | | |

## பகுதி - 2

01) 1. காலைக் காட்சி
2. நிகழ் காலம்
3. மெல்ல மெல்ல
4. இருள்
5. கார்
6. தங்கத் தட்டு
7. விரிந்தன

02) உழவன் வயலை உழுத பின் தானியங்களை விதைத்தான்

03) 1. ஆற்றங்கரை
2. கலை விழா

04) மாலை, மலை, மழை

05) ! .

06) உண்மையை மறைத்தல்

07) தீர்ப்பு

08) இளமைக் காலத்தில் கற்ற கல்வி என்றும் நிலைத்திருக்கும்

09) போத்து

10) 1. பயிற்சியை
2. சுயநலமுள்ள

11) 1. coconut
2. shop
3. Look at me
4. Eight

12) 1. நான் பூக்கள் பறித்தேன்
2. முன்னுக்கு வருக
3. கிணறு

13) பெயர் என்ன?

14) பொத்த கியவன்ன.

15) 1. கொன்றை
2. இஞ்சி

16) புகைத்தல் தடை
இலங்கை மின்சார சபை

17) 1. 1 2. 3 3. 2
4. 1 5. 3 6. 4
7. 1 8. 4 9. 2
10. 3 11. 7 12. 3
13. 1 14. 2 15. 2
16. 3

18) 1. 45l 2. 105 l
3. 35 l 4. 960 ரூபா
5. 8 6. செவ்வாய் புதன்

19) 1. 3010, 3011
2. 152 ரூபா 3. 207
4. 7 5. 24km
6. 4 7. $\frac{6}{8}$
8. 30050m
9. 2 10. $\frac{3}{6}$
11. $\frac{3}{8}$
12. 224 13. 350ml
14. 8 மணி 35 நிமிடம்

19. காளைக்கு பசு போல, சேவலுக்கு.
1. கோழி
2. பேடு
3. குஞ்சு


20. கண்டுபிடி ⟶ தொலைந்த பொருள் என்பது போல
பழுதுபார்த்தல் ⟶
1. உடைந்தபோத்தல்
2. பழையபொருள்
3. பழுதடைந்தபொருள்


★ **தரப்பட்ட சொற்கூட்டத்துடன் பொருந்தக்கூடிய சொற்களைத் தெரிவு செய்க.**

21. காற்பந்து, வலைப்பந்து, கூடைப்பந்து
1. கரப்பந்து
2. பட்மின்டன்
3. எல்லே

22. திங்கள், சந்திரன், நிலவு
1. பரிதி
2. பார்
3. மதி

23. தரப்பட்ட உதாரணத்திற்கு அமைய ? என்ற இடத்தில் வரக்கூடிய உரு எது?





24. 1 2 3 4 5 ⟶ 5 4 3 2 1
க ச ப த ம ⟶ ம த ப ச க
L X D M F ⟶ ?


1. FMDXL
2. ꟻMDX⅃
3. ⅃WDX⅃

25. பின்வரும் தொடர்பில் அடுத்துவரும் பெயர் எது?
மதுமிதா, தாரங்கி, கிருசியா, யார்வசி
1. சியாமி
2. சிந்துஜா
3. சிரோன்மணி

26. சுகந்தி தன்னிடம் உள்ள பணத்தில் 2/5பங்கில் உணவுப்பொருட்களும் 1 / 5 பங்கில் உடைகளும் வாங்கினால் மிகுதியை வங்கியில் இட்டாள். அவள் வங்கியில் இட்ட பணம் ரூபா. 2400/= ஆயின் அவளிடமிருந்த மொத்தப்பணம் யாது?
1. ரூ.4800/=
2. ரூ.6000/=
3. ரூ7200/=

27. சதுரக் கூம்பகமொன்றின் படம் தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள விரிப்புக்களில் எதனைக் கொண்டு இக்கூம்பகத்தை ஆக்க முடியாது?





28. A,B என்ற இரு இடங்களுக்கிடையிலான நேரான வீதியின் தூரம் 160 km ஆகும். காலை 7மணிக்கு A யிலும் Bயிலும் இருந்து இரண்டு பேருந்துகள் ஒன்றையொன்று நோக்கி எதிர்த்திசையில் பயணத்தை ஆரம்பித்தன. A யிலிருந்து புறப்படும் பேருந்து, மணிக்கு 20km என்ற கதியிலும் Bயில் இருந்து புறப்படும் பேருந்து, மணிக்கு 30km என்ற கதியிலும் பயணிக்கின்றன. முற்பகல் 9மணிக்கு அவை பயணத்தை நிறுத்தும் போது, இரண்டு பேருந்துகளுக்கும் இடையிலான தூரம் யாது?
1. 60km
2. 30km
3. 80km

29. கண்காட்சியொன்றிற்கு வளர்ந்தோர், சிறியோர் ஆகியோர்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் பெறப்பட்டன. ஒரு வளர்ந்தவரும் சிறுபிள்ளைக்குமான கட்டணம் ரூபா.44 ஆகும். ஒருவளர்ந்தவருக்கும் இரு சிறுவர்களுக்குமான கட்டணம் ரூபா.58 ஆகும். வளர்ந்தோருக்கான கட்டணம் யாது?
1. ரூபா.30.00
2. ரூபா.24.00
3. ரூபா.14.00

30. கொழும்பில் இருந்து ஹற்றனுக்குச் சென்ற மூன்று புகையிரத வண்டிகளின் பிரயாணம் தொடர்பான விபரம் பின்வருமாறு,

| புகைவண்டி | கொழும்பில் புறப்பாடு | ஹற்றனை அடைந்தது |
|---|---|---|
| உடறட்ட மெனிக்கே | மு.ப 6.45 | பி.ப 12.55 |
| பொடி மெனிக்கே | பி.ப 3.30 | இரவு 9.05 |
| பதுளை தபால்வண்டி | பி.ப 8.05 | அதிகாலை 3.15 |

இவற்றுள் குறைந்த நேரத்தில் பயணம் செய்த வண்டி எது?
1. உடறட்ட மெனிக்கே
2. பொடி மெனிக்கே
3. பதுளை தபால்வண்டி

31. மூன்று சிறுவர்கள் தங்களின் உண்டியலில் சேகரித்த வெவ்வேறு நாணயக்குற்றிகளின் விபரம் வருமாறு

| பெயர் | எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | ரூபா.5.00 | ரூபா.2.00 | ரூபா.1.00 |
| கீர்த்திகன் | 4 | 12 | 11 |
| வித்தகி | 2 | 08 | 20 |
| யதீசன் | 5 | 04 | 12 |

இவர்களில் அதிக பணத்தைச் சேகரித்தவர் யார்?

1. கீர்த்திகன்
2. வித்தகி
3. யதீசன்

32. இராமுவும் சோமுவும் ஒவ்வொரு மாதத்தின் நாலாவது வெள்ளிக்கிழமையிலும் சந்திப்பது வழக்கம் அவர்கள் இருவரும் கடந்த யூன்மாதம் 22ஆம் திகதி கடைசியாகச் சந்தித்தால் அடுத்ததாக அவர்கள் சந்திக்கவேண்டிய திகதி யாது?

1. யூலை 22ஆம்திகதி
2. யூலை 27ஆம்திகதி
3. யூலை 21ஆம்திகதி


33. தீபாவிடம் ரூபா 2.70உம் சோபாவிடம் ரூபா. 1.50உம் மாலாவிடம் 90சதமும் உள்ளன. இவர்களின் தாயார் தீபாவிடமிருந்து குறித்த தொகைப் பணத்தைப்பெற்று மற்ற இருவருக்கும் பகிர்ந்து வழங்கி, மூவரிடமுள்ள பணத்தின் அளவைச் சமனாக்கினார். தாயார் தீபாவிடம் பெற்றுப் பகிர்ந்தளித்த பணம் எவ்வளவு?

1. ரூபா.1.00
2. ரூபா.2.00
3. 40சதம்


34. குறித்தவொரு வீட்டில் சில சிறுவர்கள் இருந்தனர். அப்பிள்பழங்களும் இருந்தன. ஆளுக்கு இரண்டு அப்பிள் பழங்கள் வீதம் பங்கிட்டு வழங்கினால் ஒரு பழம் மிகுதியா-கும். ஆளுக்கு மூன்று அப்பிள் பழங்கள் வீதம் பங்கிடப்பட்டால் ஒருசிறுவனுக்குப் பழம் ஒன்றும் கிடைக்காமல் இருக்கும். அந்த வீட்டிலுள்ள சிறுவர்கள் எத்தனை? பழங்கள் எத்தனை?

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் – | 03 | 04 | 05 |
| பழங்கள் – | 07 | 09 | 12 |
| | 1. | 2. | 3. |

★ **எண்கோலங்களில் – ? – இடத்தில் வரவேண்டிய எண்கள் யாவை என கீறிட்ட இடத்தில் எழுதுக.**

35. 


______________________

36. 



______________________


★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்தெடுத்து விடையின் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.**


37. தொட்டி ஒன்றினுள் நிமிடத்திற்கு 6 லீற்றர் வீதம் நீர் விடப்படுகின்றது. அதே தொட்டியிலிருந்து இன்னொரு குழாய் மூலம் நிமிடத்திற்கு 4லீற்றர் நீர் வெளியேறுகின்றது. தொட்டியின் கனவளவு 60 லீற்றராயின் , அத்தொட்டி நிரம்ப எடுக்கும் நேரம் யாது?


1. 60 நிமிடம்
2. 10 நிமிடம்
3. 30 நிமிடம் (..............................)

★ **38,39ஆம் வினாக்களில் தரப்பட்ட சதுரமுகிக்குப் பொருத்தமான விரிப்பை தெரிந்து எடுக்க.**


38. 


1. 


2. 

3. 

39. 

1. 

2. 

3. 

40. தரப்பட்ட கூற்றுக்களில் உண்மையற்றது எது?

1. மன்னார் மிகவும் வறண்ட பிரதேசமாகும். எனவே, அங்கு உப்பு விளைவிக்கப்படுகின்றது.
2. இலங்கையின் மத்திய பகுதி மலைநாடு ஆகும். அங்கேயே எல்லா ஆறுகளும் உற்பத்தியாகின்றன.
3. கண்டித் துறைமுகத்தில் இருந்து தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

# சுற்றுலா பஸ் விபத்து

## குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கும் அதிபர்

## விபத்திற்கு காரணம் என்ன?

## இனி செய்ய வேண்டியது என்ன?

மொனராகலை கல்வி வலயத்திற்குட்பட்ட நமுனுகுல தென்னக்கும்புர தமிழ் வித்தியாலய மாணவர்கள் சுற்றுலா சென்ற பஸ்வண்டி விபத்துக்குள்ளான சம்பவம் கடந்த வாரத்தின் மிகச் சோகமான சம்பவம்.

கடந்த 19 ஆம் திகதி 76 மாணவர்கள், 7 ஆசிரியர்கள் 6 பெற்றோரை ஏற்றிக் கொண்டு நுவரெலியா சென்ற பஸ்வண்டி சுற்றுலா முடிந்து திரும்பி வரும் வழியில் "சீதா எலிய பேர வங்குவ" என்ற இடத்தில் மாலை 3 மணியளவில் பஸ் பாதையை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் நால்வர் உயிரிழந்ததுடன், 72 பேர் நுவரெலியா பொது வைத்தியசாலையிலும் கண்டி வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.



இதில் இரண்டு பேர் அதி தீவிர கண்காணிப்புப் பிரிவில் உள்ளனர். மேலும் வைத்தியசாலையில் சிகிச்சைபெறுவோரில் பலர் பலத்த காயங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

இவ் விபத்தில் அண்மையில் ஊவா மாகாண பட்டதாரி ஆசிரியராக நியமனம் செய்யப்பட்ட கல்முனை பாலமுனையைச் சேர்ந்த சீதுல் சாபில் (32), பெற்றோரில் ஒருவரான மாரிமுத்து பாலகிருஷ்ணன், பஸ் நடத்துநர் சன்னாசி பாரதிராஜா, சாரதி சுனில் நிசாந்த (31) ஆகிய நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பந்தமாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருவதுடன் அதிபர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

இந்த பஸ் வண்டியில் 55-60 பேர்வரையே ஆசனத்தில் அமர்ந்து செல்ல முடியும் என்ற போதிலும் இதில் 90 பேர்வரை பயணம் செய்திருக்கின்றனர்.

அதேபோல் தற்போது நுவரெலியா பிரதேசத்தில் சீரற்ற காலநிலை நிலவுகின்றது. அங்குள்ள பாடசாலைகள் சீரற்ற காலநிலை காரணமாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கும் போது பாடசாலை நிர்வாகம் நுவரெலியா பிரதேசத்தை தெரிவுசெய்து சென்றது சரியா? என்ற வினாவும் முன்வைக்கப்படுகிறது.

முதலாவது காரணத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் நன்மை கருதி குறைந்த போக்குவரத்து கட்டணத்தை அறவிடும் நோக்கோடு பாடசாலை மாணவர்கள் தரம் 1 தொடக்கம் 7 வரையான சிறுவர்கள் என்ற அடிப்படையில் ஒரு சீட்டில் அதிகமானோரை உட்காரவைக்க முடியும் என்ற எண்ணத்தில் அதிகமானோர் அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம்.

இரண்டாவது காரணமாக காலநிலை சீர்கேட்டினால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளலாம். அன்றைய தினம் நுவரெலியா பிரதேசத்தில் அதிகமான பனிமூட்டம் காணப்பட்டதாகவும், கடும் காற்றுடன் கூடிய மழை காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இருப்பினும் ஒட்டுமொத்த குற்றச்சாட்டையும், அதிபர் மீதோ ஆசிரியர்கள் மீதோ சுமத்த முடியாது. விபத்து என்பது எப்படி நிகழும்? எப்போது நிகழும்? யாரால் நிகழும்? என்று எதிர்வு கூற முடியாது.

விபத்துக்கான காரணத்தை யாராவது ஒருவர் மீது போட வேண்டும் என்பதற்காக அதிபர் மீது பழியை போடலாமே தவிர இவ்விபத்தில் அதிபர் முழுமையாக குற்றம் சுமத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். காரணம் விபத்து நிகழாவிட்டால் இது பற்றி யாரும் பேசப்போவதில்லை.

அத்தோடு பாடசாலை அதிபர் மீது தென்னக்கும்புர தோட்ட மக்கள் நல்ல அபிப்பிராயம் தெரிவித்ததுடன் பாடசாலையில் அதிபர் வெற்றிடம் காணப்பட்ட போது யாரும் முன்வராத நிலையில் தானாகவே முன்வந்து பொறுப்பேற்றுள்ளதையும் அதன் பின் கல்வி செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றதாகவும் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய பாடசாலையாக இருந்தாலும் அண்மையில் நடைபெற்ற ஊவா மாகாண தமிழ்த் தினப் போட்டிகளில் கூட வெற்றிபெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதும் அதிபரின் சுற்றுலாவுக்கான திட்டமிடலில் குறைபாடுகள் காணப்படவே செய்கின்றன. காரணம் சீரற்ற காலநிலை உள்ள நுவரெலியா பிரதேசத்திற்கு சென்றது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. பொதுவாக சுற்றுலா செல்லும் போது பல விடயங்களை அவதானிக்க வேண்டும். இதற்கு பாடசாலை அதிபர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். பாடசாலையை பொறுத்தவரை நல்லதோ கெட்டதோ எது நடந்தாலும் அதற்கான முழுப்பொறுப்பையும் அதிபரே ஏற்க வேண்டியுள்ளதுடன், பதிலளிக்க வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. ஆகவே பாடசாலை மாணவர்களுக்கான கல்வி சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யும் போது நாம் எந்த பஸ்ஸை தெரிவுசெய்ய வேண்டும்? பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் யார்? அவர்களின் பின்னணி என்ன? நாம் செல்லப் போகின்ற பிரதேசத்தின் காலநிலை எவ்வாறு உள்ளது? அங்கு தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகள் என்ன? கட்டணம் எவ்வளவு வசூலிப்பது? அதனை மாணவர்களுக்கு செலுத்த முடியுமா? எவ்வாறான உணவு வழங்குவது என சுற்றுலா சம்பந்தமான முழுமையான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு சுற்றுலா முடிந்து வந்தவுடன் சரியான வரவு-செலவுகளை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் காட்ட வேண்டும்.

இந்த விபத்து சம்பவத்திற்கு பிறகு மலையக பாடசாலை மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது பற்றி சிந்திக்க தூண்டுகின்றனர். ஆனால் விபத்து நிகழ்ந்தது என்பதற்காக பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு உதவக் கூடிய அவர்களின் பொது அறிவை மேம்படுத்தக் கூடிய சுற்றுலாக்களை நிறுத்துவது என்பது உகந்தது அல்ல. பல ஆயிரம் பாடசாலைகளில் பல வருடங்களாக சுற்றுலா சென்றே வருகின்றனர். அதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. நாம் என்னதான் திட்டமிட்டு செயற்பட்டாலும் அதை தடுக்க முடியாது. விபத்து என்பது எங்கிருந்தாலும் நடந்தே தீரும். ஆகவே இந்த விபத்தை முன்னிலைப்படுத்தி பாடசாலை நிர்வாகங்கள் மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதில் பின்நிற்கக் கூடாது. ஆனால் மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும்.

எஸ். சந்திரமோகன்

# எனக்குப் பிடித்த தலைவர் ஹிட்லர்

வசந்தம் தொலைக்காட்சியின் இளம் அறிவிப்பாளர்களில் ஒருவர் பிரியதர்ஷினி. ஒரு சக்ஸஸ்புல் அறிவிப்பாளராக வலம் வந்தாலும் அறிவிப்புத் துறைக்கு அப்பால் பல திறமைகளையும் கனவுகளையும் கொண்டிருப்பவர். பிரியதர்ஷினி இந்தவாரம் பேஷ்புக் பகுதியில் தன்னைப்பற்றிய சில விடயங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.



**வசந்தம் அறிவிப்பாளர் பிரியதர்ஷினி**

வரலாற்று சிறப்புமிக்கதும், பல வளமான கலைஞர்களை வாழ வைத்து கொண்டிருப்பதுமான திருகோணமலையின் கோபாலபுரம்தான் என் பிறப்பிடம். அம்மா தியாகதேவிகா, அப்பா வின்சன் பீரீஸ். இவர்களுக்கு நான் ஒரே மகள். எனது குடும்பம் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவ குடும்பம். துரதிஷ்டவசமாக அன்னை, தந்தை இருவரையும் இழந்துவிட்டேன்.

சிறுவயதிலிருந்தே நான் ரொம்ப சுட்டிப் பெண். எல்லா விடயங்களிலும் முன்னிலை வகிக்க விரும்புவேன். பாடசாலை காலத்தில் எந்த போட்டிக்குச் சென்றாலும் முதலாம் இடத்தை தட்டிக்கொண்டு வந்து விடுவேன்.

இன்னும் சொல்லப்போனால் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட முதல் நாளே பாடசாலை காலைக் கூட்டத்தில் திருக்குறள் சொன்னதையும், அதிபர் என்னைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டு பாராட்டியதையும் மறக்க முடியாது. நான் கற்ற மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் மேடைதான், அறிவிப்பு என்றால் என்னவென்று எனக்கு கற்றுத் தந்தது.

வாழ்க்கையில் நான் சந்தோசத்தை கண்ட நாட்களை விட துன்பங்களை கண்ட நாட்களே அதிகம். நான் வலிகளால் செதுக்கப்பட்டவள். ஆனாலும் இந்த வாழ்க்கை எனக்குப் பிடித்திருக்கிறது. சவால்களை சமாளிக்க கற்றுக் கொண்டிருப்பதால் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கிறது. பாடசாலைகால போட்டிகளில் கிடைத்த விருதுகள்தான் நான் இந்த துறைக்கு வா அடிப்படை காரணம்.

எனது வெற்றிகளுக்கு காரணமானவர்களில் பிரதான இடம் கடவுளுக்குதான். அவர்தான் என் தாய், தந்தை எல்லாமே. அதைப்போல் என் அம்மாவின் உடன் பிறந்த சகோதரர்கள் அன்பான கண்டிப்புடன் என்னை இதுவரை வளர்த்திருக்கிறார்கள்.

அத்துடன் எனது வயதான பாட்டி, என்மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் இன்று வீட்டிலிருந்து இவ்வளவு தொலைவில் நாகரீகம் மிகுந்த இந்த கொழும்பு மாநகரிலும், திருகோணமலையின் பண்பாடு குலையாத பெண்ணாக என்னை வைத்திருக்கிறது.

இது மட்டுமில்லாமல் திறமைக்கு வறுமை தடையல்ல என்று காட்ட எனது கல்விக்கு தேவையான அனுசரணையை வழங்கிய சமூக சேவகி திருமதி சோனியா மற்றும் என்டன், செல்வராஜன் ஆகியோரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

என்னுடைய இலக்கு ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு உளவளத்துணை வளவாளராவது. தற்போது நான் சட்ட பீடத்திற்கு தெரிவாகியிருக்கிறேன். தொடர்ந்தும் என் இலட்சிய பாதை விரிந்தே செல்லவிருக்கிறது.

### அறிவிப்பு துறைக்கு வந்த முதல் நாள் அனுபவம்?

உண்மையைச் சொல்ல போனால் இந்த துறைக்கு வந்த முதல் நாளே வேலையை விட்டு ஓடி விடுவோமா என்று தோன்றியது. காரணம் வசந்தத்தின் அத்தனை அறிவிப்பாளர்களும் மிகவும் திறமையானவர்கள். இவ்வளவு திறமையானவர்களுடன் என்னால் ஈடுகொடுக்க முடியாதென்ற எண்ணமே தோன்றியது. எனக்குள்ளிருந்த இந்த மனநிலையை மாற்றி என் திறமைகளை செப்பனிட்டு வெளிக்கொணர்ந்தவர் எமது முகாமையாளர் கிருபா அண்ணாதான்.

### கவர்ந்த தலைவர்?

அவர் கொஞ்சம் வித்தியாசமானவர். அவரை இந்த உலகம் பார்க்கிற பார்வை வேறு. நான் பார்க்கிற பார்வை வேறு. அவர் வேறுயாருமல்ல, ஜேர்மனிய சர்வதிகாரி அடோல்ப் ஹிட்லர். கொஞ்சம் வித்தியாசமான ரசனையாக இருக்கிறதில்லையா? உண்மையில் ஹிட்லர் ஒரு சிறந்த ஆன்மீகவாதி. தனது ஆட்சிக் காலத்தில் எந்த பெண்களையும் தவறாகப் பயன்படுத்தாதவர். சிறந்த நாவன்மை மிக்கவர். அவருடைய சிந்தனைகள் வித்தியாசமானவை. மிகச் சிறந்த நம்பிக்கையாளன். சவால்களை சளைக்காது சந்தித்தும் புறமுதுகிடாதவர். இப்படி பல காரணங்களால் எனக்கு ஹிட்லரை பிடிக்கும். அவருடைய சிந்தனைகளில் ஒன்று "நீ நடப்பதற்கு பாதைகள் தேடாதே! நீ நடந்தால் அதுவே பாதையாக வேண்டும்."

### சந்திக்க விரும்பும் நபர் யார்?

எனக்கு கவிப்பேரரசு வைரமுத்துவை ரொம்பவே பிடிக்கும். அவருடைய கவித்திறனுக்கு நான் அடிமை. அவர் கவிதைகளில் இருக்கும் சொல்லாட்சி சொல்லில் அடங்காதது. அவரை சந்திக்க முடிந்தால் அது என் பேறு.

### படித்ததில் பிடித்தது?

வேதாகமத்தில் ஒரு இடத்தில் "நீ காலாட்களோடு ஓடி களைத்துவிட்டால் எப்படி குதிரைகளோடு ஓடுவாய்? நீ காலாட்களோடு ஓட உருவாக்கப்பட்டவள் அல்ல, குதிரைகளோடு ஓடப்பிறந்தவள்" என்று உள்ளது.

இந்த வார்த்தைகள் படிப்பவர்கள் யாருக்கும் தோல்விகளை சகிக்கவும் எதிர்ப்புகளை சமாளிக்கவும் கற்றுக் கொடுக்கும்.

### வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்

நிறைய இருக்கின்றன. இருந்தாலும் சந்தோஷமான விடயங்களை விட துக்கமான விடயங்கள் தான் அதிகம். அதில் என்னை உலுக்கிய சம்பவம் என் தாயாருடைய பிரிவு. ஒரு பெண்பிள்ளைக்கு தாயினது அரவணைப்பு மிக அவசியம். அந்தபாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அம்மா எனக்காக பட்டதுன்பங்கள் சொல்லி முடியாதவை. கணவனை இழந்த நிலையில் கையில் என்னைச் சுமந்து கொண்டு அவர் பயணித்தது ஒரு நம்பிக்கையின் பயணம். இன்று என் முன்னேற்றம் கண்டு சந்தோஷப்பட என் தாய் என்னோடு இல்லாத வலியை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

### பெண் என்ற ரீதியில் உங்களுடைய சமூகப் பார்வை

இன்றைய காலகட்டத்திலும், திறமைப் படைத்த பல பெண்கள் இலை மறைக்காய்களாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பெண்களே தங்கள் பெருமையை உணராததுதான். இன்னும் பல கவிதைகள் வீட்டில் அடுப்படிகளுக்கருகில் தூக்கிக்கொண்டுதான் இருக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும். ஒரு பெண் சாதிக்க வெளியுலகிற்குதான் வரவேண்டும் என்று அவசியமில்லை. வீட்டில் இருந்த வண்ணமே தன் உணர்வுகளுக்கு உயிர் கொடுத்தால் எத்தனையோ திறமைசாலிகளை உருவாக்க முடியும். எனவே ஒவ்வொரு பெண்ணும் துணிந்து சாதிக்க முன்வர வேண்டும்.

சந்திப்பு: எஸ்.ரோஷன்

## இப்படியும் ஒருவர்..!

கடமைக்கு சரியான நேரத்தில் வராத ஆசிரியர்களையும் கடமைக்கே வராத ஆசிரியர்களையும் பற்றி நாம் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் சரியான நேரத்தில் பாடசாலைக்கு செல்ல கரைபுரண்டோடும் ஆற்று தண்ணீருடன் தினமும் போரிட்டுவரும் ஆசிரியரை அறிந்திருக்க மாட்டோம். இவர் வாழ்வது இந்தியாவின் கேரள மாநிலத்தில். பெயர் அப்துல் மாலிக். இவர் இரும்பழி எனுமிடத்தில் உள்ள பள்ளியில் 1992இல் ஆசிரியராக சேர்ந்தார். வீட்டிலிருந்து மூன்று பஸ்கள் மாறினால்தான் பள்ளியை அடைய முடியும். அதுமட்டுமின்றி பஸ் ஏறுவதற்கு வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடக்கவும் வேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்த ரூட்டில் பஸ் சேவை மிக குறைவு. இதனால் அவரால் பள்ளிக்கு சரியான நேரத்துக்கு செல்ல முடியவில்லை. வேலையில் சேர்ந்து முதல் கல்வியாண்டு முடிந்த பிறகுதான் பள்ளிக்கு எளிதில் வர கடலுண்டி ஆற்றை கடந்தால் போதும் என்ற யோசனை பிறந்தது.

அன்று முதல் இன்று வரை கடலுண்டி ஆறு, மாலிக்கின் தினசரி போக்குவரத்து வழியாக மாறிவிட்டது. மாலிக்கின் வீடும் அவர் பணியாற்றும் பள்ளியும் கடலுண்டி ஆற்றின் இருகரைகளில் உள்ளது. இதன் அருகே பாலங்கள் எதுவும் இல்லை. எனவே தினமும் ஆற்றை நீந்திக் கடந்து பள்ளி செல்கிறார். மாலையிலும் இதேபோல் வீடு திரும்புகிறார். தற்போதுள்ள கனமழையிலும் மாலிக் இந்த கடின பாதை வழிதான் பள்ளிக்கு செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம்

07ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள கண்ணியத்தின் உச்சக் கட்டமாகவே அவர்களின் உடலை மறைக்கும் விதமான சிறப்பான ஆடை முறையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

ஆனால் இன்று ஒரு சில முஸ்லிம் பெண்கள் இந்த அபாயாவை ஒரு நாகரிக உடையாகக் (பேஷனாக) கருதி அணிகிறார்கள். இது உண்மையில் வேதனைக்குரிய ஒரு விடயமாகும். என்று கவலையுடன் தனது கருத்தைச் சொன்னார்.



ஹுஸைனியா அரபுக் கல்லூரி அதிபர் எம்.எம். எம்.இலியாஸ்

பலர் இன்று முஸ்லிம் பெண்களின் ஆடை அமைப்பை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்ற அதே நேரத்தில், ஒரு தேரர் முஸ்லிம் பெண்களின் ஆடை அமைப்பைப் பற்றி நல்ல முறையில் கூறியுள்ளமை தான் வியப்பாக உள்ளது.

சர்வமத ஆய்வு வட்டம் அண்மையில் நிப்போன் ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் கலாநிதி ஹுஸ்னுபலாக வஜிர ஸ்ரீ நாயக்க தேரர் கூறிய கருத்து இவ்வாறு இருந்தது;

முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடைகள் ஒழுக்கம் மிக்கதாகும். முஸ்லிம் மாணவிகள் அணியும் ஆடைகள் சிறப்பானவை. இதனை நாமும் பின்பற்ற வேண்டும். அண்மையில் முஸ்லிம் நாடொன்றுக்கு நான் சென்றபோது அங்குள்ள பெண்கள் அணிந்திருந்த ஆடைகள் என்னை மிகவும் கவர்ந்தன. ''எனவே அந்த ஆடை அமைப்பை நாமும் பின்பற்றினால் நன்றாக இருக்கும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

எனவே இந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம் பெண்களின் ஆடை அமைப்பு எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் விதத்திலேயே அமைந்திருக்கின்றது. அபாயா விடயத்தில் பிரச்சினை எழுவதற்கு ஒரு சிலரின் இனவாத தூண்டுதல்கள் காரணமாக இருக்கலாம்.

இவ்வார பேஸ்புக் பகுதியில் வசந்தம் எப்.எம். அறிவிப்பாளர் பிரியதர்ஷினியின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் வசந்தம் தொலைக்காட்சி என்று குறிப்பிப்பட்டுள்ளது. இதை வசந்தம் எப்.எம். என திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## வீட்டுச்சாவியால் விளைந்த விபரீதம்

ஆண், பெண் இருபாலாரும் வேலைக்கு சென்றால் தான் இன்றைய பொருளாதார சுமையை சமாளிக்க முடியும்.

இவ்வாறான வீடுகளில் வீட்டை மூடிவிட்டு தம் குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும் தெரிந்த இடத்தில் வீட்டுச்சாவியை மறைத்து வைத்துவிட்டு செல்வது சிலரின் பழக்கம்.

இவ்வாறு செய்தால் வீட்டுக்கு முதலில் வருபவர்கள் வெளியில் காத்திருக்க வேண்டியதில்லை.

இவ்வாறு வீட்டு முற்றத்தில் சாவியை மறைத்து வைத்துவிட்டு சென்றதால் 3-1/2 இலட்சம் பெறுமதியான நகைகளை பறிகொடுத்த சம்பவம் கம்பளை பகுதியில் நடைபெற்றுள்ளது.

கம்பளை துனுகேஉல்ல பிரதேசத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் கம்பளையில் வெவ்வேறு பகுதிகளில் தொழில்புரிவதாலும் நகரில் குழந்தைகள் கல்வி கற்பதாலும் காலையில் அன்றாட வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுச் சாவியை வீட்டு முற்றத்தில் மறைத்துவைத்துவிட்டு செல்வது இவர்களது வாடிக்கை.

வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு முதலில் வரும் கணவனோ, மனைவியோ இல்லை பாடசாலை மேலதிக வகுப்புகளிற்கு சென்றுவரும் பிள்ளைகளோ வெளியில் காத்திருக்காமல் சாவியை எடுக்க இச்செயற்பாடு இவர்களுக்கு உதவியாக இருந்துள்ளது.

வழமைப்போல தொழிலுக்குச் சென்று வீடு திரும்பிய தம்பதிகளுக்கு அன்று அதிர்ச்சி காத்திருந்தது. வீட்டு அலுமாரி திறந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். அலுமாரியில் வைத்திருந்த பணத்தையும், நகைகளையும் காணவில்லை.

உடனடியாக புசல்லாவை பொலிஸில் முறைபாடு செய்தனர். புசல்லாவை பொலிஸ் நிலைய அதிகாரி எஸ்.ராஜா தலைமையில் விசாரணைகள் ஆரம்பமாகின.

வீட்டுக் கதவு உடைக்கப்படாமல் சாவியைக் கொண்டு திறக்கப்பட்டிருப்பதைக் கண்ட பொலிஸார் சாவியை எங்கே வைத்துவிட்டு போவீர்கள்? வைக்கும் இடம் யார் யாருக்கு தெரியும்? போன்ற வினாக்களை தொடுத்தனர்.

அன்று சாவி வைக்கும்போது எதிர்வீட்டில் இருக்கும் 13 வயதுடைய மாணவி அதைக் கண்டதாக பொலிஸாருக்கு அத்தம்பதியினர் வாக்குமூலம் வழங்கினர். தகவலை செவிமடுத்த குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி நிமல் சுகததாச அம்மாணவியின் வீட்டுக்குச் சென்று விசாரணையைத் தொடங்கினார்.

தரம் 09 இல் கல்வி கற்கும் அம்மாணவியின் தந்தையார், அவர்களை பிரிந்து சென்றுவிட்டபின் தாயார் வேறொரு ஆணுடன் இணைந்து வாழ்வதையும் அறிந்துகொண்டனர். அம்மாணவியிடம் ''இன்று பாடசாலைக்கு சென்றீர்களா?'' என அப்பொலிஸ் அதிகாரி வினவ, அம்மாணவியும் ''ஆமாம் இன்று நான் பாடசாலைக்கு சென்றேன்'' என எவ்விதத் தயக்கமுமின்றி கூறியுள்ளார். ''அப்படியா, நல்லது இன்று என்னென்ன பாடம் படித்தீர்கள்? கொப்பியை கொண்டு வாருங்கள் பார்ப்போம்'' என கேட்க, அம்மாணவி திக்கு முக்காடி முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்துள்ளார்.

பொலிஸாருக்கு அம்மாணவி மீது பலமாக சந்தேகம் எழவே கொஞ்சம் மிரட்டும் தொனியில் கேட்க அம்மாணவி பொலிஸ் அதிகாரியிடம் உண்மைகளை கூறியுள்ளார்.

தாயின் 2 ஆம் கணவனின் பேச்சைக் கேட்டேதான் இவ்வாறு செய்ததாகவும் அவ்வீட்டிலிருந்து 2-1/4 பவுண் மாலை, 3-1/2 பவுணுடைய மூன்று வளையல்கள் மற்றும் ஐந்து மோதிரங்களையும், பத்தாயிரம் ரூபா பணத்தையும் கொண்டுவந்து அவரிடம் கொடுத்த தாகவும் உண்மையைக் கக்கியுள்ளார். மாணவியின் வாக்கு மூலத்தின் பிரகாரம் அத்தாயின் காதலனையும் அம்மாணவியையும் புசல்லாவை பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

எமது வசதிக்காக செய்யும் சில வேலைகள் விபரீதத்தில் முடிவதுண்டு. சாவியை வீட்டு முற்றத்தில் வைப்பது, அயலவர்களை நம்பி சாவி கொடுப்பதைவிட ஆளுக்கொரு சாவியை செய்து வைத்துக் கொள்வது இந்த காலத்தில் தமது உடமைகளை காத்துக்கொள்வதற்கு உரிய தீர்வாக இருக்கும் என்பதை மேற்கூறிய சம்பவம் சொல்லிச்செல்கின்றது.

**எம்.தாசன்**



# உயிர் காத்த தமிழன்


வீட்டைவிட்டு வெறியே சென்றவர் திரும்பி வருவாரோ என்ற அச்சம் இருந்த யுத்த காலம் கடந்து விட்டாலும் வெளியில் சென்றவர் திரும்பி வரும்வரையில் துயரத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டிய அளவுக்கு நாட்டில் வீதி விபத்துக்கள் மலிந்துவிட்டன.

பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகளில் விபத்துக்கள் தொடர்பான செய்திகளுக்கும் பஞ்சமே இல்லை எனலாம்.

இந்தச் சூழ்நிலையில் பாரிய விபத்தொன்றை தடுத்து நிறுத்தி பல உயிர்களை தமிழர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

**அந்த விபத்து மட்டும் முன்கூட்டியே தடுக்கப்படாமல் இருந்திருந்தால் இலங்கை ரயில்வே வரலாற்றில் இதுவரையிலும் இடம்பெற்றிருக்காத பாரிய அழிவுகளுடன் கூடிய துன்பியல் விபத்து சம்பவமொன்று இடம்பெற்றிருக்கும் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இலங்கை ரயில்வே வரலாற்றில்



மிகப்பெரிய விபத்துகளில் 1964 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி மீரிகமவில் இடம்பெற்ற விபத்தை குறிப்பிடலாம். வேகத்தை கட்டுப்படுத்த முடியாததனால் இடம்பெற்ற அந்த விபத்தில் 50 பேர் பலியானார்கள்.

அதற்கு பின்னர் அவ்வப்போது ரயில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் ஒவ்வொரு நாளும் மனித உயிர்களை குடித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற 1683 ரயில் விபத்துக்களில் 36 பேர் பலியானதுடன் 117 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இடம்பெற்ற வீதி விபத்துகளில் 8450 பேர் பலியாகியுள்ளனர். பாதசாரிகள் மற்றும் சாரதிகளின் கவனயீனம், அதிகவேகம் மற்றும் சமிஞ்ஞைகளை கவனிக்காமை போன்றவற்றினால் இந்த விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் பண்டாரவளை பொலதென்ன எனுமிடத்திலுள்ள ரயில் கடவையில் கடந்த சனிக்கிழமை 22 ஆம் திகதி இடம்பெறவிருந்த பாரிய விபத்தொன்றை ரயில்கேட் பாதுகாவலரான ராமய்யா வரதராஜா தடுத்து நிறுத்தி அந்த ரயிலில் பயணித்த பயணிகளுக்கே தெய்வமாகியுள்ளார்.



கொழும்பிலிருந்து பதுளைக்கு 15 டொன் சீமெந்து ஏற்றிக்கொண்டு பயணித்த லொறியின் சுங்கான் செயற்படாமையினால் சாரதி சாதுரியமாக லொறியை தண்டவாளத்திற்குள் திருப்பியுள்ளார். தண்டவாளத்தில் சில அடிதூரம் பயணித்த லொறி அப்படியே சரிந்து நின்றுவிட்டது.

ஏககாலத்தில் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கி புறப்பட்ட பொடிமெனிக்கே ரயிலும் பண்டாரவளை ரயில் நிலையத்தை தாண்டி பொலதென்னையை கடந்து செல்வதற்காக மிக வேகமாகவே விரைந்து வந்து கொண்டிருந்தது.

**என்ன செய்வதென்று தெரியாத ரயில்கேட் பாதுகாவலரான ராமய்யா வரதராஜா தன் கையிலிருந்த சிவப்பு நிற கொடியுடன் ரயிலின் எதிரே ஓடினார். தன் உயிரையும் பொருட்படுத்தாது கையிலிருந்த அபாய குறியீட்டை அசைத்தபடி ஓடினார்.**

வேகமாக வந்த ரயில், கவிழுந்து கிடந்த லொறிக்கு சில அடிக்கு அப்பால் சட்டரென தரித்து நின்றது. விபத்தும் தவிர்க்கப்பட்டது.

திடீரென ரயில் தரித்து நிறுத்தப்பட்டது ஏனென்று தெரியாத ரயில் பயணிகள் பின்னர் நிலைமையை புரிந்து கொண்டு ராமய்யா வரதராஜாவை இறைவனாகவே நினைத்து போற்றினர்.

இந்த இடத்தில் இதுவரையிலும் சுமார் 20 விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டறை தெரிவிக்கிறது.

2012 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி இதே இடத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸொன்று தண்டவாளத்தில் பயணித்தமையினால் பஸ்ஸில் பயணித்த பயணிகளின் உயிர்கள் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டன.

**இந்நிலையில் பாரிய ரயில் அனர்த்தத்தை தடுத்த ரயில்கேட் பாதுகாவலரான ராமய்யா வரதராஜா பொடிமெனிக்கேயில் பயணித்தவர்களுக்கு தெய்வத்துணை புரிந்தார் என்றால் அதில் தவறில்லை எனலாம்.**

**நாடோடி**





# தந்தையை வாழ்த்துவோம்

சிறுபான்மை இனம்
பெரும்பான்மை இனத்தால்
புறக்கணிக்கப்படுவது போல்
குடும்பம் எனும் கோயிலுக்குள்ளும்
புறக்கணிப்புப் புயல் வீசுகிறது
பாசப்பிணைப்பில்!
தாய்க்குக் கொடுக்கும் புகழாரம்
தந்தைக்கு கொடுப்பதில்லை
தரணியில்!
தந்தையும் தாயும்
தரணியில் வாழும் தெய்வங்கள்
முதலில் கண்ணியப்படுத்த
வேண்டியவர் தந்தை!
நிராகரிக்கப்படுவதும் அதுதான்.
என் வாதத்திலும்
உன் வாதத்திலும்
நியாயம் உண்டு
நீ பாதி நான் பாதி
பங்கு போட்டுக்கொள்வோம்!
நியாயத்தில்!!
அம்மாவெனும் அழுகுரலுடன்
அகிலம் கண்டாலும்
அன்றுமுதல் அம்மாவுக்கும்
எனக்கும் உனக்கும்
பணிவிடை செய்தவர் அப்பா!
மனிதன் உருவான மாமிசம்
அவருடையது
உடலில் ஓடும் குருதி
அவருடையது
சொற்போர் தொடுக்கிறேன்
என்றால்
அவர் விதைத்த ஆற்றல்தான்
அதுகூட அவருடையதுதானே?
அப்பா பெயர்
பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில்
இல்லாமல் போனால்
இழிவாக பேசுவார்கள் அல்லவா?
இதில் யாருக்கு முதன்மை?
என் விவாதம்
என் அப்பாவிற்கு முதலிடம்
உன்னாலும் என்னாலும்
விவாதத்தில் வெற்றி கொள்ள
முடியாது ஏனெனில்
நீ அம்மா பிள்ளை!
அம்மாவை நியாயப்படுத்துவாய்!!
நான் அப்பா பிள்ளை
அப்பாவை நியாயப்படுத்துவேன்!
உடன்படிக்கை செய்வோம் வா!
தர்க்கம் புரிவதில்லை
தந்தையும் தாயும் சரிபாதி என்றும்
இரு நேர் கோடுகள் என்றும்
இதயத்தில் நிறுத்துவோம்
தாயுடன் இணைந்து
தந்தையை வாழ்த்துவோம்

ஏ.டாரிஸ், மிகிந்தலை.



# மலை தேச மன்னர்கள்

முதல் நாள்
ஒன்றாய் கூடுவார்கள்
மறுநாள்
துண்டாய் ஓடுவார்கள்
தேர்தல் வந்தால் மட்டும்
எம்மை தேடுவார்கள்
மேடையிலே
சமூக நலனென்று பேசுவார்கள்
ஜாடையிலே
தன்னலம் கொண்டே வாழ்வார்கள்
கூட்டுச் சேர்ந்து
குரல் கொடுப்போம் என்பார்கள்
நோட்டு கையில்
கிடைக்கா விட்டால்
வேற்றுக் கட்சி
சேர்ப்பார்கள்
மக்கள் உரிமைக்காக போராடுவோம்
என்பார்கள்
தனக்கேற்ற உரிமைகள்
தன்கையில் கிடைத்தவுடன்
தலை தாழ்ந்து போவார்கள்
இவர்களால் மட்டுந்தான்
பெறுபேறு குறைந்தவருக்கும்
பெரும்பேறு பெற்றுத்தரும்
பதவி வழங்க முடியும்
தொழில்களுக்கு விண்ணப்பம்
கொடுத்தே
படித்த பாதிப் பேர்
இவர்களால்
பைத்தியமாய்ப் போனார்கள்
மலை தேசத்தில்
மக்கள் சேவைக்கு
அரசியல் இல்லை
மன்னர்களின் தேவைக்கே
அரசியல்

ஏ.கோகுலஹாலன், ஹொட்டனுர்.

# கலி காலம்

தென்றலே பார்த்துப் போ
கலி காலம் இது
கயவர்கள் காத்திருப்பர்
காமக் கண்களோடு
கன்னியர் என நினைத்து
காயப்படுத்திடுவர் உன்னையும்

டி.கே.அஸீம், வாழைச்சேனை.



# ஹைக்கூ கவிதைகள்

## அம்மா
எப்பொழுதும் மறக்காத
முதல் வார்த்தை

## நண்பன்
இறைவனின் மறு
அவதாரம்

## காதலி
என் கவிதைக்கு
சொந்தக்காரி

## ஏழை
வறுமையின்
கிரீடம்

## மீன் குஞ்சு
நான் தண்ணீரில்
இருப்பதால் என் கண்ணீரும் உனக்கு
புரியவில்லை

## காதலர் தினம்
நான் காணும் கனவுக்கும்
ஒரு தினமா?

சவரிமுத்து டயஸ், டிக்கோயா.

# இதயம்

ஒரு முறை உன்னை
திரும்பிப் பார்த்ததால்
ஓராயிரம் தடவைகள்
உன்னை நினைக்க வைத்தாய்!
உன் காந்த பார்வையில்
காணாமல் போன
என் இதயத்தை
நான் தேடியதில்லை!
ஏதனால் தெரியுமா?
அன்பே
என் இதயமே
நீ அல்லவா?

சஜயா, தலவாக்கலை.

# அம்மா

ஆயிரம் தடவை கடவுள் நாமத்தை
ஜெபித்தால் நல்லது என்றார் ஐயர்
நானும் ஆயிரம் தடவையல்ல,
பத்தாயிரம் தடவை ஜெபித்தேன்
கடவுள் பெயரையல்ல
உன் பெயரை!
நான் நேசிக்கும் முதல்
கடவுளே நீதானே......!

என்.மேகலா, பொகவந்தலாவ.



# ஆதவனே!

மாறாத உமது அன்பினால்
மறக்க முடியாத உன் நினைவுகளை
மரணிக்கும் வரை சுமந்து
செல்வேன்

நா.சரண்யா, பொகவந்தலாவ.

# பிரிந்து செல்லாதே!

அன்று உன் உண்மைக் காதலை
புரியாமல் வெறுத்தேன்
இன்று நீ என் உண்மைக் காதலை
புரிந்தும் வெறுக்கிறாய்!
''காரணமில்லா சண்டைகளால்''

சாரண்யா, வவுனியா

# பழகிப் பார்

அம்மாவுக்கு என்று
தனியாக கவிதை
வேண்டாம்....
அன்பாக பழகிப் பார்
அம்மாவே கவிதை தான்....

ஜி.அஸ்வின்

# நினைவு

பெண்ணே! உன்
கண்களை
மூடி ஓர் கணம்
என்னை
நினைத்துப்பார்
உன் உள்ளம்
முதல் உன் உதடுகள்
வரை என் காதலை
உன் காதோரமாக
வந்து கவிதை
வடிவில் பரிமாற்றம்
செய்யும்
தருணத்தை
நினைத்துப்பார்
உன் நினைவெனும்
பூந்தோப்பில் நான்
ஒரு முள்ளற்ற
ரோஜாவாக இடம்
பிடிக்க உன்
இதயத்தில் ஓர் இடம்
தருவாயா?
கலங்கிய
கண்களுடன்
கூறுகின்றேன்
என் காதலின்
நினைவுகளும்
பிரிவுகளும்
என்னை விட்டும்
ஓயாது

எஸ்.பாஹிர்,
பொத்துவில் 04.


க
வி
தை
க
ள்

உதய சூரியன் ''கவிதைச்சரம்''
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 58, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:------------------------------
முகவரி:------------------------------
தொலைபேசி இல:------------------------------

Colour: Black

# கல்லறை—03

— சீ.சந்திரன் —



சனி,ஞாயிறு நாட்களில் கூட மாலையில் போய் அவரிடம் ஆங்கிலம் கற்போம். அவரின் வீட்டு வேலைகளைச் செய்து கொடுப்பேன். கடைக்குப் போய் சாமான் வாங்கிவந்து கொடுப்பேன். அவர்கள் என்னை ஒரு மாணவனாகவோ ஒரு வேலைக்காரனாகவோ பார்க்காமல் தங்கள் சொந்த மகனைப் போலப் பார்த்தார்கள். நான் அவர்களின் மகனைத் தூக்கிவைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டுவேன். அந்தச் சிறுவனும் என்னுடன் பழகிவிட்டான்.

சின்ன மாஸ்டரின் வீட்டோடு நான் மிக நெருக்கமாக இருப்பது பெரிய மாஸ்டருக்கு ஏனோ பிடிக்கவில்லை! எத்தனையோ முறை என்னைக் கூப்பிட்டு எச்சரித்திருக்கிறார். அதையெல்லாம் நான்பொருட்படுத்துவதில்லை. அதனால் அவர் என்னிடம் மிகவும் வெறுப்பாகவே நடந்து கொள்வார்.எனக்கும் நாளுக்கு நாள் அவர் மீது வெறுப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது.

போதாக்குறைக்கு எனக்கு''அடிமை'' என்ற பெயரையும் சூட்டி என்னை அவமானப்படுத்தினார்.மற்ற மாணவர்களும் என்னை ''அடிமை'' என்று பட்டப்பெயர் சூட்டி கேலி பேசத்தொடங்கிவிட்டார்கள். அப்போதெல்லாம் சின்ன மாஸ்டர்தான் எனக்கு ஆறுதல் கூறுவார்.

ஆனாலும் பெரிய மாஸ்டரின் மீது தீராத பகை உணர்வு என் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது.

அப்போதுதான் ஒருநாள் சின்ன மாஸ்டர் ஓர் அவசர பயணம் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏதோ இன்டர்வியூவிற்கோ அல்லது ஊருக்கோ போயிருக்கவேண்டும்.

அவர் என்னைக் கூப்பிட்டு,''நான் திரும்பி வர இரண்டு மூன்று நாட்களாகும். நீ டீச்சருக்குத் துணையாக இங்கேயே இரு. எங்கேயும் போக வேண்டாம்.'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

நான் சீதையைக் காத்த இலட்சுமணன் போல, வீட்டையே சுற்றிச்சுற்றி வந்தேன்.

அன்று விடுமுறை நாள். ஞாயிற்றுக்கிழமை. பாடசாலை அமைதியில் மூழ்கிக்கிடந்தது. அங்கிருந்து அரைமைல் தூரத்தில் தான் தொழிலாளர்களின் குடியிருப்பு லயன்கள் இருந்தன. அதனால் சன நடமாட்டம் எதுவும் இல்லை.

பிற்பகல் மூன்று மணியிருக்கும்,ஹெட்மாஸ்டர் என்னைக் கூப்பிட்டார். நான் தயங்கித் தயங்கி சென்றேன்,''போய் சிகரட் பக்கற் ஒன்றை வாங்கிவா'' என்றார்.

அண்மையில் கடைகள் எதுவும் இல்லை. சற்று தொலைவில் உள்ள கடைக்குப்போய் வருவதென்றால் எப்படியும் அரை மணிநேரமாகும். ஹெட்மாஸ்டரின் பேச்சை தட்டமுடியவில்லை. விரைவில் திரும்பி வரவேண்டும் என்ற உறுதியுடன் வேகமாக மூச்சிரைக்க ஓடினேன். அப்போதெல்லாம் ''பீகொக்''சிகரட்தான் பிரசித்தமாக இருந்தது. ஹெட்மாஸ்டர் பீகொக் சிகரட்தான் குடிப்பார் என்று எனக்குத் தெரியும்.

கடைக்குப்போய் ஒரு பக்கற் சிகரட் வாங்கிக்கொண்டு வரும் போது. தற்செயலாக அந்த வழியாக தோட்டத்து லொறி வந்துகொண்டிருந்தது. லொறி எதற்கோ மேற்பிரிவுக்கு போகிறது போலும்.

ட்ரைவர் என்னைக் கண்டதும் லொறியை நிறுத்தி என்னையும் ஏற்றிக் கொண்டு வந்து பாடசாலைக்கு அருகில் இறக்கிவிட்டார். அதனால் சுமார் இருபது நிமிடங்களுக்குள் திரும்பி வந்துவிட்டேன்.

ஹெட்மாஸ்டரின் வீடு திறந்து கிடந்தது. மாஸ்டர் வீட்டில் இல்லை. பிறகு கொடுப்போம் என்று சின்ன மாஸ்டரின் வீட்டுக்குப் போனேன். வீடு சாத்தப்பட்டிருந்தது. கதவைத் தட்டினேன், மீண்டும் மீண்டும் பலமாகத் தட்டினேன் பத்து நிமிடங்கள் கழிந்திருக்கும்.

ஹெட்மாஸ்டர் கதவைத் திறந்தார். எனக்கு ஏதோ விளங்குவது போலவும் விளங்காதது போலவும் இருக்கிறது.

வியர்த்து விறுவிறுத்து தலையெல்லாம் கலைந்து கிடக்க ஒரு வில்லனைப்போல வந்தார்.

என்ன நடக்குமோ என்று பயந்தபடி சிகரட் பைக்கற்றை நீட்டினேன்.

நான் நடுங்கிய அளவுக்கு என்மேல் அவருக்கு கோபம் வரவில்லை. மாறாக செயற்கையாக ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சிகரட் பைக்கற்றை வாங்கிக் கொண்டார், மிகுதி சில்லறையை கொடுத்தேன் ''வேண்டாம் நீயே வைத்துக்கொள்'' என்று சொல்லிவிட்டு நடந்தார்.

எதற்காக இந்த சில்லறையை எனக்குக் கொடுக்கிறார்? எனக்கு இந்தக் காசு தேவையில்லை. அவர் மீதே விட்டெறியவேண்டும் என்று என் கைகள் துடித்தன. தைரியம் வரவில்லை, அந்த சில்லறைகளை ஜன்னல் மீது வைத்துவிட்டு உள்ளே சென்றேன். டீச்சரும் கட்டிலில் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்தார், அழுகிறார் போலிருக்கிறது.

தொடரும்...!

## அபிப்பிராயம்

பிறர் அபிப்பிராயத்திற்காக உங்கள் கொள்கைகளை மாற்றிக் கொண்டே இருக்காதீர்கள். பிறர் நம் அபிப்பிராயங்களை ஏற்கவில்லை என்பதற்காக இடிந்து போகாதீர்கள். பிறர் சொல்கிறார்கள் என்பதற்காக ஒரு காரியம் செய்துவிட்டு பின்னால் அவர்கள் நம்மை இப்படி செய்ய வைத்து விட்டார்களே என்று வருத்தப்படாதீர்கள். முதலிலேயே இயலாது என்றால் முடியாது எனத் தைரியமாய்க் கூறிவிடுங்கள். எதற்கும் மன்னிப்புக் கேட்கும் மனோபாவம் கொள்ளாதீர்கள். எதற்கும் உங்களையே நொந்து கொண்டு, தன் நிலைக்குப் பரிதாபப்பட்டு சித்திரவதை செய்து கொள்ளாதீர்கள். பிறர் உங்களைக் குழந்தையாய்ப் பாவித்து உச்சி மோந்து, சீராட்டி, பாராட்டி, தாலாட்டும் நிலையில் உங்களைப் பிறரிடம் பறிகொடுக்காதீர்கள்.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

**27.06.13 முதல்**

**03.07.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | பிரயாணம் | விருப்பம் | பெருமை | பாராட்டு | காரியசித்தி | ஆர்வம் | தொல்லை |
| ரிஷபம் | செலவு | ஜெயம் | அமைதி | பரிவு | நற்சொல் | உதவி | சிக்கல் |
| மிதுனம் | அமைதி | நிம்மதி | ஜெயம் | நன்மை | சினம் | அலைச்சல் | பக்தி |
| கடகம் | சிந்தனை | சாந்தம் | சினம் | பகை | கவனம் | ஆக்கம் | இலாபம் |
| சிம்மம் | பாராட்டு | அமைதி | போட்டி | யோகம் | பாசம் | குழப்பம் | நிம்மதி |
| கன்னி | நன்மை | பாசம் | தெளிவு | வரவு | நம்பிக்கை | ஜெயம் | பரிவு |
| துலாம் | சோதனை | அன்பு | இன்பம் | நலம் | நலம் | பாராட்டு | ஆக்கம் |
| விருச்சிகம் | ஆக்கம் | முயற்சி | சாதனை | மேன்மை | நிம்மதி | புகழ் | இன்பம் |
| தனுசு | சாதனை | பாராட்டு | விவேகம் | சிந்தனை | வரவு | நம்பிக்கை | நற்செயல் |
| மகரம் | பேராசை | ஆர்வம் | மேன்மை | கவனம் | இலாபம் | பரிவு | நஷ்டம் |
| கும்பம் | நஷ்டம் | உதவி | மகிழ்ச்சி | பெருமை | பக்தி | வெற்றி | உற்சாகம் |
| மீனம் | சாந்தம் | பக்தி | சாந்தம் | பிரயாணம் | மறதி | சலனம் | உதவி |

# மலேசியாவிற்கு பணிப்பெண்ணாகச் சென்ற பெண்

# சவப்பெட்டியில் வந்தாள்



எனது மகள் ஜீவா மிகவும் அழகானவள். துடிப்பானவள். சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்று எங்கள் குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்ற நோக்குடனே வெளிநாடு சென்றாள். குடும்ப சுமையை சுமந்தவள் பிணமாக திரும்பி வந்தாள்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன் மலேசியாவிற்கு பணிப்பெண்ணாகச் சென்ற (ஜீவா) மகளை பறிகொடுத்துவிட்டு பெற்றோர் கண்ணீருடன் கதறும் வார்த்தைகள் இவை.

ஜீவா (21 வயது) தலவாக்கலை வட்டகொட ஒல்போட் தோட்டத்தைச் சேர்ந்தவள். தனது குடும்பத்தில் ஒரே செல்லப்பிள்ளை. குடும்ப சுமையால் தனது கல்வியை தொடர முடியாமல் இடைநிறுத்தி விட்டு கொழும்பில் ஒரு ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரிந்து வந்தாள்.

தனக்கு கிடைத்த சம்பளத்தை சேகரித்து அந்தப்பணத்தைக் கொண்டு மலேசியாவிற்கு பணிப்பெண்ணாகச் சென்றாள்.

குறித்த பெண் மலேசியாவிற்கு சென்று ஒரு மாதத்திலேயே தான் பணி புரியும் வீட்டில் தன்னை கொடுமைப்படுத்துவதாக பெற்றோருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருக்கிறாள்.

அதன் பிறகு அழைப்புவந்த இலக்கத்திற்கு மீண்டும் ஜீவாவின் பெற்றோர் தொடர்புகொள்ள முயற்சிசெய்தபோது தொலைபேசி செயல் இழந்து இருந்ததாக ஜீவாவின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தனது மகளை எப்படியாவது இலங்கைக்கு கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் ஜீவாவின் பெற்றோர் முயற்சி செய்து கொண்டிருந்த போதுதான் ஜீவா இறந்துவிட்ட தகவல் கிடைத்துள்ளது.

இச்செய்தியை நம்பமுடியாத உறவினர்கள் வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அறிவித்து, ஜீவா பணிபுரிந்துவந்த எஜமான் வீட்டுக்கு தொடர்பு கொண்ட போது வீட்டில் யாரும் இல்லாதபோது குறித்த யுவதி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக வீட்டு எஜமானர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிய வயதில் சிறப்பாக வாழவேண்டும், குடும்பத்தை காக்கவேண்டும் என ஆசையோடு, எத்தனையோ கனவுகளுடன் மலேசியா சென்றவள் இறுதியில் சவப்பெட்டியில் உயிரற்ற உடலாக வந்து சேர்ந்தாள்.


மலேசியா சென்ற ஜீவாவிற்கு என்ன நடந்தது? ஜீவாவின் மரணம் கொலையா? அல்லது தற்கொலையா? என்ற சந்தேகம் குடும்பத்தாருக்கு இருந்தாலும் அதற்கான விடைகள் இன்னும் கிடைக்கவில்லை.

**சா.சதீஸ்குமார்**

## எது மகிழ்ச்சி?



அடுத்தவருக்கு வலியை ஏற்படுத்துவதுதான் மகிழ்ச்சி என்று குதர்க்கமாக யோசிக்கும்போது நம் வாழ்வின் நோக்கம் சிதைந்து போகும். அது நம் உள்ளே உள்ள எதிரி. எதிரி வெளியில் இருந்தாலாவது அவரை சமாளிக்க வாய்ப்பிருக்கிறது. அவர் உங்களுக்குள் இருந்தே ஆட்டுவிக்க ஆரம்பித்துவிட்டால் உங்களது வாழ்வு அதல பாதாளத்துக்கு இழுத்துச் செல்லப்படும். பிறகு, உங்களது மகிழ்ச்சியை அழிக்க வெளியிலிருந்து இன்னொரு எதிரி எதற்கு? நீங்களே போதும். மாறாக உங்களது மகிழ்ச்சியை வெளிச் சூழல்களுக்குப் பணயம் வைக்காமல், உள்ளே அமைதியாக இருக்கக் கற்றுக் கொண்டால், உங்கள் திறமை முழுமையாக வெளிவரும். வெற்றிகள் உங்களைத் தேடிவரும். மகிழ்ச்சி தானே வரும்.



## நல்ல செய்தி

ஒரு சித்திரக் கலைஞன் தான் சிரமப்பட்டு வரைந்த இருபது படங்களை ஒரு பொருட் காட்சியில் விற்பனைக்கு வைத்தான். மறுநாள் அவன் அங்கு வந்தபோது எல்லாப் படங்களும் விற்பனையாகியிருந்ததைப் பார்த்து வியந்து போனான். அந்த காட்சி சாலையின் உரிமையாளரிடம் அது பற்றிக் கேட்டான். அவர் சொன்னார், ''உனக்கு நல்ல செய்தி ஒன்றும் கெட்ட செய்தி ஒன்றும் வைத்துள்ளேன்,'' என்றார்.ஆர்வத்துடன் அவன் விபரம் கேட்க அவர் சொன்னார், ''நல்ல செய்தியை முதலில் சொல்கிறேன். நேற்று ஒருவர் வந்து உன்னுடைய படங்களை எல்லாம் பார்த்தார். பின் என்னிடம் இந்தப் படங்களை வரைந்தவர் இறந்த பின் இப்படங்கள் நல்ல விலைக்குப் போகுமா என்று விசாரித்தார். நானும் கண்டிப்பாக நல்ல விலைக்குப் போகும் என்றேன். உடனே அவரே அத்தனை படங்களையும் விலக்கு வாங்கிக் கொண்டார்,'' அவன், ''இது நல்ல செய்திதான். சரி, கெட்ட செய்தி ஒன்று இருப்பதாகச் சொன்னீர்களே, அது என்ன?'' என்று கேட்டான். அவர் சொன்னார், ''அந்த ஆள் வேறு யாரும் இல்லை. உன்னுடைய டாக்டர் தான்.''




ஆயிரம் பேரை நண்பராக வைத்திருப்பது உனக்குப் பெருமையல்ல...
ஆயிரம் பேர் எதிர்க்கும்போது உனக்காக அவர்களை எதிர்க்கக் கூடிய நண்பன் ஒருவனை வைத்திருப்பதே உனக்குப் பெருமையாகும்.

கடைக்காரர்: இந்தாங்க, நீங்க கேட்ட டீ
வந்தவர்: கடிப்பதற்கு ஏதாவது இருக்கா?
கடைக்காரர்: என் நாய்தான் இருக்கு.



கடவுள் : பக்தா! உன் பக்தியை மெச்சினேன். உனக்கு என் வரம் வேண்டும்?
பக்தன் : எனக்கு என்ன வரம் வேண்டும் என்று கூட தெரியாத நீயெல்லாம் ஒரு கடவுளா?

## கொஞ்சம் சிரிக்க சிந்திக்க




இயக்குனர்: யாரைக் கேட்டு உள்ளே வந்தே?
தயாரிப்பாளர்: என்ன சார், என்னைப் பார்த்தா இப்படிக் கேட்கிறீர்கள்?
இயக்குனர் :நீங்கதானே, நம்ம படத்துக்கு நல்ல பெயர் வைக்கனும்னு சொன்னீங்க, இதுதான் நம்ம படத்தோட பெயர்.



## கடவுளைப்பற்றி

புத்தரிடம் ஒரு கற்றறிந்த பிராமணர் கடவுளைப் பற்றிக் கேட்டார். புத்தர் பதில் ஏதும் சொல்லாமல் கண்களை மூடிக் கொண்டார். இதைப் பார்த்த அவர் சீடர் ஆனந்தனுக்கு ஏமாற்றம்.ஏனெனில் அந்த பிராமணருக்கு சீடர்களின் எண்ணிக்கை அதிகம். அவர் மட்டும் பௌத்த மதத்திற்கு மாறி விட்டால் அவரைப் பின்பற்றி ஆயிரக்கணக்கானோர் பௌத்த மதத்திற்கு மாறி விடுவார்கள். ஆனால் புத்தர் மௌனமாகவே இருந்தார். சிறிது நேரம் கழித்து அந்த பிராமணர் புத்தரை வணங்கி நன்றி தெரிவித்துவிட்டு போய் விட்டார். அவர் போனபின் ஆனந்தன் புத்தரிடம் நல்ல ஒரு வாய்ப்பை இழந்து விட்டதாகக் கூறி வருத்தப்பட்டார். புத்தர் சொன்னார், ''ஒரு நல்ல குதிரைக்கு சாட்டையின் நிழலே போதுமானது. அந்தக் குதிரையை சாட்டையினால் அடிக்க வேண்டியதில்லை. அவர் மன மாற்றம் அடைந்துவிட்டார்.'' ஆனால் ஆனந்தனுக்கு இந்த பதில் திருப்தி அளிக்கவில்லை. ஆனால் மறுநாள் காலை அந்த பிராமணர் ஆயிரக்கணக்கான சீடர்களுடன் புத்தரிடம் வருவதைப் பார்த்த ஆனந்தனால் நம்ப முடியவில்லை. அவர் அன்று இரவு புத்தரிடம், ''இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்ந்தது? நீங்கள் கண்களை மூடி மௌனமாக இருந்தது அவரை அவமதிப்பதுபோல நான் உணர்ந்தேன். ஏனென்றால் அவர் முக்கியமான கேள்வி கேட்டு நீங்கள் சரியான பதில் சொல்ல மறுத்து விட்டீர்களே?'' என்று கேட்டார். புத்தர் சொன்னார், ''இந்த மௌனம் ஒரு சூட்சுமமான பதில் ஆகும். அது அவருக்குத் தெரியும். கடவுளைப் பற்றி யாரும் எதுவும் சொல்ல முடியாது. நான் ஏதாவது சொல்லியிருந்தால் என் மீது நம்பிக்கை இல்லாது அவர் போயிருப்பார். ஏனென்றால் நான் சொல்லும் கடவுள், கடவுளே அல்ல என்பதையே காட்டியிருக்கும். அதனால்தான் நான் என் கண்களை மூடிக் கொண்டு மௌனமாக இருந்தேன். கண்களைத் திறந்திருந்தால் கூட கண்களின் மூலம் நான் எதுவோ சொல்ல வருகிறேன் என்று அவர் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடும். எனவே என் மௌனம்தான் சரியான பதில். அதை அவரும் ஏற்றுக் கொண்டார்.''



# ஆவியுடன்... சில நாட்கள்...!



நீங்கள் ஆவிக் கதைகளைக் கேட்டிருப்பீர்கள்! சில சமயங்களை ஆவி அனுபவங்களைச் சந்தித்துக் கூட இருப்பீர்கள். அதில் பல சம்பவங்கள் வெறும் பிரமைகளாகக் கூட இருக்கலாம். ஆனால் ஆவியுடனே சுமார் ஒரு மாத காலம் வாழ்ந்த அனுபவம் உங்களுக்கிருக்கிறதா? எனக்கிருக்கிறது!

என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

இந்தச் சம்பவம் நடந்து சுமார் 25 வருடங்கள் இருக்கலாம்.

அப்போது நான் க.பொ.த. உயர்தரத்தில் பயின்று கொண்டிருந்தேன். நுவரெலியாவில் போதிய தனியார் வகுப்புகள் இல்லாத நிலையில் கண்டியில் தங்கி தனியார் வகுப்புகளுக்குச் சென்று கொண்டிருந்தேன்.

குறைந்த வாடகைக்கு கண்டியிலிருந்து சற்று தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில்தான் அறை கிடைத்தது. ஒரு சிறிய அறை. அதில் இரண்டு பேர்! அவன்தான் என் நண்பன் மாதவன். மாத்தளையைச் சேர்ந்தவன்.

அமைதியான சுபாவம். நல்ல அறிவாற்றல், இரக்ககுணம் என்பன மாதவனுக்கே உரிய அடையாளங்கள்.

ஒரு வார காலத்திற்குள் நானும் மாதவனும் நல்ல நண்பர்களாகி விட்டோம்.

சுமார் 4 மாத காலம் கடந்திருக்கும் ஒருநாள் தான் தன் குடும்பத்தோடு பொலன்னறுவைக்கு உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக செல்வதாகவும் வர ஒரு வார காலம் ஆகும் எனவும் சொல்லிச் சென்றான் மாதவன்.

மாதவன் இல்லாமல் எனக்குப் பொழுது போகவில்லை. அவன் வரவுக்காக காத்திருந்தேன்.

ஒரு சனிக்கிழமை மாலை அவன் வந்தான். முகத்தில் இனம்புரியாத வாட்டம்! பயணக் களைப்பாக இருக்கும் என நினைத்துக் கொண்டேன். மறுநாளும் அதற்கு மறுநாளும் அவன் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. மிகச் சோகமாக வாட்டமாகவே இருந்தான். என்னிடம் எதுவும் பேசவில்லை. பத்து வார்த்தை பேசினால் ஒரு வார்த்தையில் பதில் சொன்னான். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏதாவது பிரச்சினையாக இருக்குமா? என்னிடம் பகிர்ந்து கொண்டால் அவன் மனப்பாரம் குறையும் என எண்ணி எப்படியும் இன்று வழமைக்குக் கொண்டு வந்து விடுவது என முடிவெடுத்தேன். ஆனால் நான் அறைக்கு வரும்போது மணி 7 இருக்கும். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். எழுப்ப மனம் வரவில்லை. நானும் பாடப்புத்தகத்தை விரித்து வைத்துப் படிக்க ஆரம்பித்தேன். மணி 11 ஐக் கடந்திருந்தது. தூக்கம் என் கண்களைச் சுழற்றியது. படுக்கலாம் என நினைத்து விளக்கணைக்க எத்தனிக்கையில் அவனிடம் சிறு அசைவு தெரிந்தது. அருகில் சென்று அவனைத் தட்டினேன். பதிலில்லை.

மாதவா? ஏன் படுத்திட்டே, உடம்பு சரியில்லையா...? என்றேன். பதிலில்லை.

சரி அயர்ந்து தூங்குகிறான் என நான் நினைத்து திரும்புகையில் சட்டென அவன் முகத்தில் ஒரு புன்னகை!

உறங்கிக் கொண்டிருப்பவன் எப்படிச் சிரிக்க முடியும். அல்லது உறங்குவது போல் நடிக்கிறானா?

நான் அவன் முகத்தையே உற்றுப்பார்த்தேன்.

அப்போது...

அப்போது அவன் விழிகள் சட்டென திறந்தன. அவை அவனது கண்களாகவே தெரியவில்லை. தீர்க்கமாக என்னைப்பார்த்தவன் சட்டென சிரித்தான். அதில் கோபமா? மகிழ்ச்சியா? எனப் புரியவில்லை. ஒரு வெற்றுப் புன்னகை!

மறுகணம் சட்டென அவன் கண்கள் மூடிக் கொண்டன. அவன் விழித்ததாகவோ சிரித்ததாகவோ நம்ப முடியவில்லை. அவன் எந்தச் சலனமும் இல்லாமல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

நான் கண்டதெல்லாம் பிரமையா அல்லது உண்மையா என என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

என் தூக்கம் தொலைந்தது.

மறுநாள் அதற்கடுத்தநாள் என நாட்கள் நகர... மாதவனிடம் எந்த மாற்றமும் இல்லை. என்னிடம் அவன் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. வகுப்பு விட்டு வீடு வந்தால் உறக்கம் என இருந்தான். நானும் வற்புறுத்திக் கேட்டும் அவன் பதில் எதுவும் சொல்லவில்லை.

அது ஒரு பௌர்ணமி நாள்.

மாதவன் அறை வாசலில் நாற்காலி போட்டு அமர்ந்து வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். நான் அருகில் சென்று அமர்ந்து அவன் தோள்களில் கை வைக்க சட்டென தட்டி விட்டான். என்மீது என்ன கோபம் என எனக்குப் புரியவில்லை.

மறுபடியும் கை வைக்க என் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். நான் நிலை குலைந்து போனேன். பதில் எதுவும் சொல்லாமல் போய் பெட்சீட்டை தலைவரை போர்த்திக் கொண்டு உறங்கி விட்டான்.

நள்ளிரவு... ஏதோ சிறு சத்தம் கேட்டு கண்விழித்துப் பார்த்தேன். மாதவன் எழுந்து கட்டிலின் மேல் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர்.

நான் அருகில் சென்றேன்.

என்னைப்பார்த்ததும் அவன் அழுகையை நிறுத்தி விட்டு என்னை வெறித்தான். திடீரென வாய்விட்டுச் சிரித்தான். சிரித்துக் கொண்டே அழுதான். ஏதோ புரியாத மொழியில் கத்தினான். அரற்றினான்.

நான் அவனைப் பிடித்து உலுக்கினேன்.

மறுகணம் அவன் வீடே அதிரும்படி கத்தினான். என் கழுத்தைப் பிடித்து நெரிக்க ஆரம்பித்தான். நான் கதறினேன். சில விநாடிகள்தான்.... என் கழுத்தில் இருந்த பிடியைத் தளர்த்தி விட்டு மீண்டும் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான்.

அவனுக்குள் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தேன். மறுநாள் முதல் வேலையாக இதுபற்றி அவன் பெற்றோருக்கு அறிவித்தேன். அவர்கள் இங்கே வந்த போது அவன் நிலைமை மோசமாகவே இருந்தது. யாரையும் அடையாளம் தெரியவில்லை. ஏதேதோ பேசினான். அடிக்கடி அழுதான். அவன் பெற்றோர்கள் அவனை அழைத்துச் சென்றார்கள். அவன் பொலனறுவைக்குச் சென்ற போது கன்னி கழியாத ஒரு பெண்ணின் ஆவி அவனைப் பிடித்து விட்டதாகவும் அந்த ஆவியே அவனை அப்படி ஆட்டுவித்ததாகவும் பூசாரி ஒருவர் மூலம் அந்த ஆவி விரட்டப்பட்டதாகவும் மாதவன் நலமுடன் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன்.

சில வாரங்களுக்குப் பின் மாதவன் வந்தான். பழைய மாதவனாக. அப்போது நடந்தது எதுவும் அவன் நினைவில் இல்லை. அப்படியானால் மாதவன் உடம்பில் இருந்த ஆவியுடனா மூன்று வாரங்களுக்கும் மேலாக ஒரே அறையில் நான் இருந்தேன்...?

தகவல் தொகுப்பு -அபி

# பேசும் கிளிக்ஸ்

## சட்டம் வேடிக்கை பார்க்கிறது



மரங்களை தறித்து ஏற்றிச் செல்வது சட்ட விரோதமாகும் தலைநகர வீதியொன்றில் செல்லும் இந்த வாகனமும் வேடிக்கை பார்க்கும் அதிகாரியும்

## நாங்களும் இங்கேதான் இருக்கிறோம்



அடிப்படை வசதியின்றி இருக்கும் தோட்ட வீடு!

## இனி ஒரு விதி செய்வோம்...!



களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் அண்மையில் பயிற்சி பெற்ற கிழக்கு மாகாண பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தலைக்கவசத்தை அணிவிக்கிறார் தாயொருவர்.

## இதுவும் கடந்துபோகும்



குளிரில் நடுங்கிக் கொண்டு வேலைக்குச் செல்லும் மலையக தாய்மார்கள்

## என்ன பேசுகிறார்களோ?



களுத்துறை பகுதி வீதியொன்றில் இந்தக் காட்சி

## என் ட்ரெஸ்ஸைப் பார்த்து தப்பா நெனைச்சிடாதீங்க!



உக்ரைனிலிருந்து வந்த ஜோடியொன்று இலங்கை முறைப்படி திருமணம் செய்து கொண்டது. திருமண கோலத்தில் அவர்கள்..!



படங்கள் தர்ஷன மனமேந்திர